சட்ட மா அதிபருக்கு அனுப்பப்பட்டது

# பட்டலந்த அறிக்கை

» 02பக்கம்

Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 220 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 17 ஆம் திகதி புதன்கிழமை
(30.04.2025) ஹிஜ்ரி 1446, துல்கஃதா - 01, 0115 886187- விலை ரூ.40 பக்கங்கள் 12





# மருந்து இறக்குமதிக்கு

அரசு இராஜதந்திர பேச்சு

விசேட களஞ்சியத்துக்கும் ஏற்பாடு

» 02 பக்கம்



## தேர்தல் முடிவுகள் முற்றிலும் மாறும்

எதிர்வு கூறுகிறார் திலித்

» 02பக்கம்




## 4ஆவது தடவையாகவும் ஆட்சியைப் பிடித்த லிபரல் கட்சி

கனேடிய பிரதமராகிறார் மார்க் கார்னி!

» 10பக்கம்

# ட்ரம்ப்பை சீண்டாதீர்!



## எவ்.பி.ஐயின் அறிக்கையை நிராகரித்தால் பின்விளைவுகள் வரும் என்கிறார் ரணில்

நா. தினுஷா

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்த எவ்.பி.ஐயின் அறிக்கையை இலங்கை நிராகரித்தால் அது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு சீற்றத்தை ஏற்படுத்தும்" என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

எவ்.பி.ஐயின் விசாரணைகள் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் சூத்திரதாரி சஹ்ரான் ஹாசிமே எனத் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி, இலங்கை வேறுவிதமான கதைகளை ஊக்குவிப்பது ட்ரம்புக்கு சீற்றத்தை ஏற்படுத்தும். அவர் மேலும் வரிகளை விதிப்பார். உக்ரைனின் அரசியல் தலைமைத்துவத்துக்கு எதிராக நடந்துகொண்டது போல இலங்கைக்கு எதிராக நடந்துகொள்ளலாம். இராஜதந்திர நடவடிக்கைகளை எடுக்கலாம் என குறிப்பிட்டுள்ளார். அவர் இதுதொடர்பில் மேலும் கூறியுள்ளதாவது,

» 02 பக்கம்

## சனிக்கிழமை வியட்நாம் பயணமாகிறார் ஜனாதிபதி



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மூன்றுநாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் 03ஆம் திகதி, வியட்நாமுக்கு செல்லவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (29) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மே மாதம் 03ஆம் திகதியிலிருந்து 06ஆம் திகதிவரை வியட்நாமுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

» 02 பக்கம்

## ஆணைக்குழுவுக்கும் ஜனாதிபதிக்கும் தொடர்பில்லை

ரணிலின் சந்தேகத்துக்கு பதிலளித்தார் நளிந்த



"இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் அழைப்பு தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக கூறிய விடயத்தையே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேடையில் குறிப்பிட்டார்.

» 02 பக்கம்

## 05 வயதுக்கு குறைவான சிறுவர்களின் மரணம்

பிரேத பரிசோதனைக்கு ஆட்சேபனை

திடீரென உயிரிழக்கும் ஐந்து வயதுக்குக் குறைவான சிறுவர்களின் மரணத்துக்கு காரணம் கண்டறியப்படவில்லை என்றால், உயிரிழப்புக்கான காரணம் உறுதிப்படுத்தப்படாத ஒவ்வொரு ஐந்து வயதுக்குக் குறைவான சிறுவர்களின் சடலத்தையும் பிரேத பரிசோ தனைக்குட்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்நிலையில், இந்தத் தீர்மானம் தொடர்பில் மீளாய்வு செய்வதற்காக நேற்று முன்தினம் (28) நீதி அமைச்சினால் விசேட நிபுணர் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. எனவே, சுகாதார அமைச்சின் இந்தத் தீர்மானத்துக்கு எதிரான சாட்சிகள் எதுவும் இருக்குமாக இருந்தால் அந்தக் குழுவில் சமர்ப்பிக்க முடியுமென்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

» 02 பக்கம்

## தேர்தல் பிரசாரங்கள் 03ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவு




உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் எதிர்வரும் 03ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைவதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (29) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,...

» 02 பக்கம்

## நாடெங்கிலும் மே தினப் பேரணிகள்

தே.ம.ச. கொழும்பில் - ஐ.ம.ச. தலவாக்கலையில்

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் பிரதான அரசியல் கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்கள், அமைப்புகள் என்பன நாளை வியாழக் கிழமை (01) மே தினக் கூட்டங்களை நடத்தத் தீர்மானித்துள்ளன.

அதற்கமைய, தேசிய மக்கள் சக்தி அதன் மே தினக் கூட்டத்தை, 'நாட்டைக் கட்டியெழுப் பும் மக்கள் சக்தி அணி திரளும்' என்ற தொனிப் பொருளில் மாலை 3.30 மணிக்கு கொழும்பு, காலி முகத்திடலில்...

» 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



போர்க்குற்றத்துக்கு சர்வதேச விசாரணை வேண்டாம் என்கிற ரணில் ஈஸ்டர் தின தாக்குதலுக்கு எவ்.பி.ஐ. நடத்திய சர்வதேச விசாரணை நல்லது என்கிறாரே... ஏன் இந்த டபுள் எக்டிங்...?

### உஷ்



தேசிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் ஊடாக கொழும்பு மாவட்டத்தின் அரசியல் பிரமுகர் ஒருவர் விரைவில் பாராளுமன்றம் செல்லவுள்ளதாக தகவல்.

ஏற்கனவே இந்த பிரமுகர் தமிழ்க்கட்சி ஒன்றின் மாகாண சபையில் நீண்டகாலம் அங்கம் வகித்தவர். தேசிய மக்கள் சக்தியின் தமிழ் விவகாரங்களை கையாளும் வகையில் இவருக்கு எம்.பி. பதவியை வழங்க கட்சியின் மேலிடம் தீர்மானித்துள்ளதாம்.

## வேட்பாளர்களின் கணக்குகளில் ஏப்ரல் மாத ஊதியம் வைப்பு

இலங்கை ஆசிரியர் சங்கம் விசனம்

ලංකා ගුරු සංගමය
இலங்கை ஆசிரியர் சங்கம்
CEYLON TEACHERS' UNION

கே. சுபானி

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடும் கல்வித் திணைக்களத்தில் பணியாற்றும் அரச ஊழியர்கள் பலர் ஏப்ரல் மாத ஊதியத்தை சட்டவிரோதமாக பெற்றுக்கொண்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவ்வாறு ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை கல்விசாரா பணியாளர்கள் மற்றும் கல்வித் திணைக்களத்தில் பணிபுரியும் 400க்கும் மேற்பட்டோர் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வேட்பாளர்களாக களமிறங்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

02 பக்கம்



## தேர்தல் முடிவுகள்...

உள்ளூராட்சித் தேர்தலில் இம்முறை எதிர்பார்க்காத தேர்தல் முடிவுகள் அமையுமென்றும் சாதகமான முடிவுகளாக அமையுமென்றும் சர்வசன அதிகாரத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

நிரந்தரமாகவே தனது வர்த்தக செயற்பாடுகளிலிருந்து வெளியேறிவிட்டதாகவும் தனது அரசியல் இலக்கை அடைந்து வாழ்நாள் முழுவதும் அரசியலை விட்டுச் செல்லப் போவதில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

காலி பிரதேசத்தில் நேற்று முன்தினம் (28) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது,

''இம்முறை உள்ளூராட்சித் தேர்தலுக்காக சர்வசன சபை என்ற கருத்திட்டத்தை சர்வசன அதிகாரம் முன்வைத்துள்ளது. உள்ளூராட்சி சபைகளில் தொடர்ந்து இடம்பெற்றுவந்த சம்பிரதாயபூர்வ விடயங்களுக்கு அப்பாலான செயற்பாடொன்று கிராம மட்டத்தில் இடம்பெறாவிட்டால் கிராமங்கள் அபிவிருத்தியடையாது என்பதை நாங்கள் புரிந்து வைத்துள்ளோம்.

உள்ளூராட்சி சபையொன்றில் வெற்றியடைந்தால் உள்ளூராட்சி சபையை எவ்வாறு தொழில்முனைவு அபிவிருத்தி என்ற கருத்திட்டத்துக்கு பயன்படுத்துவது என்பதை காண்பிப்போம். வெற்றிக் கிடைக்காவிட்டாலும் சர்வசன சபையை உருவாக்குவோம். இருந்தபோதும் இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் நாங்கள் எதிர்பார்க்காத தேர்தல் முடிவுகள் கிடைக்குமென்ற நம்பிக்கை எம்மிடம் இருக்கிறது.

பதக்கம் சின்னம் தொடர்பில் குற்றச்சாட்டு முன்வைக்க எந்தவொரு வாய்ப்பும் இல்லை. 10 – 15 பில்லியன் வரி செலுத்திய நபர். தற்போதும் செலுத்திக் கொண்டே இருக்கிறேன். எனது மாத வருமானத்தை நான் முற்றுமுழுவதுமாக இறைவரித் திணைக்களத்துக்கு அறிக்கையாக தெரிவித்தே வருகிறேன்.

எனவே, எனக்கு எதிராக யாராலும் கையுயர்த்த முடியாது. எமது தலைமைத்துவமும் அவ்வாறானதே. அரசியலில் இலாபம் உழைக்க முயற்சிப்பதாக கூறுகிறார்கள் என்றால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. 83 தேர்தல் துண்டுபிரசுரங்களுடன் எமது கட்சியை சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டதாக செய்தியொன்று அண்மையில் வெளியிடப்பட்டது. இதுபோன்ற கீழ்த்தனமான செயற்பாடுகளையே தேசிய மக்கள் சக்தி செய்து வருகிறது'' என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

## ட்ரம்ப்பை சீண்டாதீர்...

''உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்ற பின்னர் அவ்வேளை அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ட்ரம்ப் தொலைபேசியில் என்னைத் தொடர்புகொண்டு பேசி, எவ்.பி.ஐயின் உதவியை வழங்கினார். நான் அமெரிக்கத் தூதுவரை தொடர்புகொண்ட தருணத்தில் ஏற்கனவே எவ்.பி.ஐ. குழுவொன்று இலங்கை வந்திருந்தது. அதன் பின்னர் ஜனாதிபதி ட்ரம்ப் என்னுடன் பேசவிரும்புகின்றார் என தெரிவித்தார்கள், நாங்கள் தொலைபேசி மூலம் உரையாடினோம்.

அவ்வேளை, ஜனாதிபதி ட்ரம்ப் எவ்.பி.ஐயின் உதவி உட்பட அனைத்து உதவிகளையும் வழங்கினார். அதன் பின்னர் அமெரிக்கத் தூதுவருடன் இடம்பெற்ற சந்திப்பின்போது எவ்.பி.ஐ. முகவரும் கலந்துகொண்டார். எவ்.பி.ஐ. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொண்டிருந்த தருணத்தில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அவ்வேளை ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக பதவிவகித்தார். தற்போது டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவி வகிக்கின்றார். அன்று எவ்.பி.ஐ. முன்னெடுத்த விசாரணை அறிக்கை சஹ்ரான் ஹாசிமே சூத்திரதாரி என தெரிவிக்கின்றது என நான் நினைக்கின்றேன். நாங்கள் இதனை மீண்டும் குழப்பினால் என்ன நடக்கும்? ஜனாதிபதி ட்ரம்புக்கு கோபத்தை ஏற்படுத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகளை நீங்கள் அறிவீர்கள். எங்களால் எதனையும் செய்யமுடியாது. யாருக்கு கோபத்தை ஏற்படுத்தக்கூடாது என்பது எங்களுக்கு தெரிந்திருக்கவேண்டும்'' என அவர் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் பிரசாரங்கள்...

''உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்றுடன் (29) நிறைவடைந்தது. அத்துடன் வாக்காளர் அட்டை விநியோக நடவடிக்கைகளும் நிறைவடைந்துள்ளன. நேற்று வரையில் வாக்காளர் அட்டைகள் வீடுகளுக்கு கிடைத்திருக்காவிட்டால் இன்றிலிருந்து சம்பந்தப்பட்ட தபால் நிலையங்களில் வாக்காளர் அட்டைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன், இந்தத் தேர்தலில் வாக்களிப்பின்போது இடது கையின் சுண்டுவிரலில் மை வைக்கப்படும். அத்துடன் அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் அவர்களின் பிரசார நடவடிக்கைகளை மே மாதம் 03ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவு செய்யவேண்டும். அதன் பின்னர் முன்னெடுக்கப்படும் பிரசார நடவடிக்கைகள் சட்டவிரோதமானதாகவே கொள்ளப்படும்.

தனியார் துறையை சேர்ந்த வாக்காளர்களுக்கு வாக்களிப்பதற்கு அவர்களின் பிரதேசங்களுக்கான தூரத்தின் அடிப்படையில் விடுமுறை அளிக்குமாறு தனியார் நிறுவன உரிமையாளர்களுக்கு அறிவித்திருக்கிறோம். மேலும், தேர்தல் பிரசாரங்களை குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மே தினக் கூட்டங்களை பயன்படுத்திக்கொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறோம்'' என்றார்.

## நாடெங்கிலும்...

மே தினக் கூட்டத்தை நடத்த தீர்மானித்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினப் பேரணியும் பொதுக் கூட்டமும் 'கிராமத்தை வெல்லும் போராட்டத்தின் தொழிலாளர்களின் பலம்' என்ற தொனிப்பொருளில் பிற்பகல் 2.00 மணிக்கு தலவாக்கலையில் முன்னெடுக்கவுள்ளதாக அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன கொழும்பில் தமது மே தினக் கூட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளதாக அறியமுடிகிறது. இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம் அவிசாவளையில் மே தினக் கூட்டத்தை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதுடன் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அடக்குமுறை, வளச்சுரண்டல்களுக்கு எதிராகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரியும் மன்னாரில் மே தின நிகழ்வுகளை முன்னெடுக்கவுள்ளதாக மக்கள் திட்ட வரைபு ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, சர்வசன அதிகாரம், தேசிய சுதந்திர முன்னணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தமிழரசுக் கட்சி உள்ளிட்ட மேலும் பல அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளும் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் மே தினக் கூட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக அறியமுடிகிறது.

## ஆணைக்குழுவுக்கும்...

அதற்கு அப்பால் ஆணைக்குழுவிடமிருந்து ஜனாதிபதிக்கு எந்தவொரு தகவலும் கிடைக்கவும் இல்லை, அவர் பெற்றுக்கொள்ளவும் இல்லை'' என்று அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (29) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில், ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு வந்துச் சென்றதன் பின்னர் அறிவிப்பொன்றை வெளியிட்டிருந்தார். இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அவருக்கு அழைப்பு விடுத்ததன் பின்னர் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி அவரே அவரின் சமூக வலைத்தள கணக்கில், 11ஆம் திகதி ஆணைக்குழு விசாரணைகளில் பங்குபற்ற முடியாது, 17ஆம் திகதி வருவதாக குறிப்பிட்டிருந்தார்.

எனவே, அவரேதான் இந்த விடயத்தை பகிரங்கமாக அறிவித்திருந்தார். இது பொது தகவலாகும். எனவே ஜனாதிபதியும் அதனூடாகவே அறிந்திருப்பார். ஒருவேளை ரணில் கூறியது அவருக்கே மறந்திருக்கலாம். அவ்வாறு இல்லாமல் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் ஜனாதிபதிக்கு எதுவும் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. 11ஆம் திகதி இரவே 17ஆம் திகதி ரணிலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது சகலருக்கும் தெரியும். ரணில் சமூக ஊடகங்களில் பகிரங்கப்படுத்திய ஒரு விடயத்தையே இரு நாட்களின் பின்னர் ஜனாதிபதி அரசியல் மேடையில் குறிப்பிட்டிருந்ததாக குறிப்பிட்டார்.

## வேட்பாளர்களின்...

இதுதொடர்பில் அவர் மேலும்,

''இந்தத் தேர்தலில் போட்டியிடுவதாயின் பணிக்குழாமிலுள்ள அதிகாரிகள் தமது பணியை இராஜிநாமாச் செய்யவேண்டும். பணிக்குழாமுக்கு உட்படாத அதிகாரிகள் ஊதியம் இல்லாத விடுமுறையை பெற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் 90 சதவீதமானோர் இச்சட்டத்தை மீறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறான வேட்பாளர்களின் வங்கிக் கணக்குகளில் ஏப்ரல் மாதத்துக்கான ஊதியம் வைப்பிலிடப்பட்டுள்ளன. இவ்வாறு வடமத்திய மாகாணத்தில் போட்டியிடும் 48 வேட்பாளர்களில் அறுவர் மட்டுமே விடுப்புக்கான அனுமதியை பெற்றுக்கொண்டுள்ளனர். இது தேர்தலில் தேவையற்ற தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் சில அதிகாரிகள் கூட்டங்களிலும் கலந்துகொண்டு தங்களின் பணியை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கு முன்னர் இடம்பெற்ற தேர்தல்களில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்ட அதிகாரிகள் பணியிலிருந்து கூட நீக்கப்பட்டனர். அதேபோன்று இது தேர்தல் சட்டம் மற்றும் நிறுவன ஒழுங்குவிதிகளை மீறும் செயற்பாடாகும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வேட்புமனுக்களை தாக்கல் செய்த பின்னர் சம்பளம் பெறுவதும் சம்பளத்துடன் கூடிய விடுமுறையை பெற்றுக்கொள்கின்றமை சிக்கலுக்குரிய விடயமாகுமென்று அநுராதபுரம் மாவட்ட செயலாளரும் தெரிவத்தாட்சி அலுவலருமான ரஞ்சித் விமலசூரியவிடம் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும்,

''தேர்தல் சட்டத்தின்படி, இவ்வாறான வேட்பாளர்களின் வேட்புமனுவை இரத்துச் செய்ய முடியும். குறித்த திணைக்களத்தினூடாக தகுந்த ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தோடு இவ்வாறு தவறுதலாக ஊதியம் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தால், குறித்த வேட்பாளர் உடனடியாக அத்தொகையை திணைக்களத்திடம் மீளளிக்க வேண்டும்'' என்று தெரிவித்துள்ளார்.

# 45 இலட்சத்து 97 ஆயிரம் வாக்குச் சீட்டுகள் புதிதாக அச்சீடு

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக 2 கோடியே 52 இலட்சத்து 6ஆயிரத்து 533 வாக்குச் சீட்டு அச்சிடப்பட்டதாகவும் 45 இலட்சத்து 97 ஆயிரத்து 608 வாக்குச் சீட்டுகளை மீண்டும் அச்சிட நேர்ந்ததாகவும் அரச அச்சகர் பிரதீப் புஸ்பகுமார தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் நேற்று (29) தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

இம்முறை மொத்தமாக 2 கோடியே 52 இலட்சத்து 6533 வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்டுள்ளன. ஒருசில உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. அந்த வழக்கு விசாரணைகளின் இறுதி முடிவுகள் வெளியாகியபோது அநேகமான தேர்தல் தொகுதிகளுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிட்டு நிறைவு செய்துவிட்டோம். அதற்கமைய, 45 இலட்சத்து 97 ஆயிரத்து 608 வாக்குச் சீட்டுகளை மீண்டும் அச்சிட நேர்ந்தது.

102 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால் வாக்குச் சீட்டுகளை மீண்டும் அச்சிட நேர்ந்ததுடன் 71 உள்ளூராட்சி மன்றங்களுக்கு போதுமான வாக்குச் சீட்டுகளை மீண்டும் அச்சிட நேர்ந்தது. அதற்கமைய, 2025ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான வாக்குச் சீட்டுக்களை அச்சிடும் பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன என்றார்.






**உலகின் மிகப்பெரிய கொள்கலன் கப்பல்களில் ஒன்றாக அறியப்படும் MSC MARIELLA, நேற்று முன்தினம்(28) கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை வந்தடைந்தது. மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள லைபீரியாவுக்குச் சொந்தமான MSC MARIELLA, என்ற கப்பல் 399.90 மீட்டர் நீளமும் 61.30 மீட்டர் அகலமும் கொண்டது. 240,737 டன் எடையுள்ள கொள்கலன்களை சுமந்து செல்லக்கூடிய இந்த மிகப்பெரிய கப்பல் 2023 இல் கட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.**

## சனிக்கிழமை வியட்நாம்...

சர்வதேச வெசாக் தினத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த விஜயம் மேற்கொள்ளப் படவுள்ளது. இதன்போது சில ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடவுள்ளார்.

அந்த ஒப்பந்தங்களுக்கு நேற்று முன்தினம் (28) இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதியும் அளிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, வியட்நாம் வர்த்தக மேம்படுத்தல் நிறுவனம் மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை, விவசாயத் துறையின் ஒத்துழைப்புக்காக இலங்கை விவசாயத் திணைக்களம் மற்றும் வியட்நாம் விவசாய விஞ்ஞான கலாசாலை ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஆகியவற்றிலும் கைச்சாத்திடப்பட வுள்ளன.

## சட்ட மா அதிபருக்கு...

பாராளுமன்றத்தில் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் சட்டவிரோதமான தடுப்பு முகாம்கள் மற்றும் சித்திரவதை முகாம்களை நிறுவுதல் மற்றும் நடத்திச் செல்லல் குறித்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியின் அறிவுறுத்தலின்படி ஜனாதிபதி செயலகத்தினால் சட்ட மா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

25 ஆண்டுகளுக்குப் பிறகு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கை தொடர்பில் அடுத்த கட்ட முன்னெடுப்புகளை மேற்கொள்ள அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதன்படி, குறித்த அறிக்கை நேற்று (29) சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

## 05 வயதுக்கு குறைவான...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (29) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதுகுறித்து விளக்கமளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''தாய், சேய் சுகாதாரம் தொடர்பில் இலங்கை ஆசிய நாடுகளிலும் உலக நாடுகளிலும் உயர்தரத்தை கொண்ட நாடாகும். அவ்வாறிருந்தாலும் 2022ஆம் ஆண்டு 1,800 சிறுவர்கள் அகால மரணமடைந்துள்ளதுடன் ஐந்து வயதுக்கு குறைவாக 3,300 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர். இது இருந்தை விட மிகவும் அபாயகரமான நிலைமையாகும்.

இதுதொடர்பில் சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியிருந்தது. உலகிலும் இதுதொடர்பில் விதிமுறைகள் இருக்கின்றன. அதற்கமைய, உயிரிழப்புக்கான காரணத்தை அறியாத, ஐந்து வயதுக்கு குறைவான சிறுவர்களின் மரணங்கள் தொடர்பில் பிரேத பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்பது சுகாதார அமைச்சின் பரிந்துரையாகும். காரணத்தை கண்டறியாமல் அந்த உயிரிழப்பை கைவிட்டால் அவர்களின் உயிரிழப்பு வீதம் அதிகரிக்கும். தாய்மாரின் உயிரிழப்பு தொடர்பில் முறையான பரிசோதனைகளை மேற்கொண்டு, முறையான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து, அந்த உயிரிழப்புக்கான காரணங்களை கண்டறிவதனூடாகவே தாய்மாரின் உயிரிழப்புகளை மட்டுப்படுத்தியுள்ளோம்.

எனவே, மேற்குறிப்பிட்டது போன்று இந்த உயிரிழப்புகள் குறித்து சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியது சரியான விடயமாகும். இந்த தொகை உண்மையானது என்பதால், சிறுவர்களின் உயிரிழப்புகளை மூடிமறைக்க முடியாது. அதன் காரணமாகவே காரணங்கள் தெரியாமல் உயிரிழக்கும் சிறுவர்கள் தொடர்பில் பிரேத பரிசோதனை முன்னெடுக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சு தீர்மானித்தது.

இந்நிலையில், அக்கரைப்பற்று பிரதேசத்தில் சம்பவமொன்று பதிவாகியிருந்தது. 05 வயதுக்கு குறைவாக குழந்தை உயிரிழந்திருந்தது. ஆனால் குழந்தை உயிரிழந்தமைக்கான காரணம் கண்டறியப்படவில்லை. அதற்கமைய, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியான வைத்தியர் ஐ.எம்.ஜவாஹீர், உயிரிழந்த குழந்தையின் உடலை பிரேத பரிசோதனைக்குட்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

ஆனால், திடீர் மரண விசாரணை அதிகாரி பிரேத பரிசோதனையை மேற்கொள்ளாமலும் எந்தவொரு காரணங்களையும் அறிவிக்காமலும் விடுவித்துள்ளார். இந்தப் பிரச்சினை உக்கிரமடைந்து அதனை அரசியல் தேவைக்காக பயன்படுத்தியமையினாலேயே இதனை மீளாய்வு செய்ய வேண்டும் என்று தீர்மானித்தோம்.

சுகாதார அமைச்சை பொறுத்தவரையில் இது முக்கியமான செயற்பாடாகும். உயிரிழப்புகளுக்கான காரணம் தெரியுமாக இருந்தால் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படாது. காரணம் தெரியாவிட்டால் மாத்திரமே இந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். இது உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். இதற்கென காலம் வழங்கப்பட்டுள்ளது. அதன் காரணமாகவே இந்த விடயம் தொடர்பில் மீளாய்வு செய்வதற்காக நிபுணர்கள் குழுவை நியமிக்க நீதி அமைச்சு தீர்மானித்துள்ளது. அந்தக் குழுவின் தீர்மானத்துக்கு எதிரான சாட்சிகளை சமர்ப்பிக்க முடியும்'' என்றார்.

## மருந்து...

மருந்து விநியோகஸ்தர்கள் முறையாக பணியாற்றாமையின் காரணமாக மருந்து இறக்குமதி தொடர்பில் அரசாங்கம் நேரடியாக தலையிட்டு இராஜதந்திர மட்டத்தில் கலந்துரையாடி வெளிநாடுகளிலிருந்து மருந்துகளை இறக்குமதி செய்ய நேர்ந்துள்ளதாகவும் நாட்டுக்கு தேவையான மருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக 07 நாடுகளுடன் கலந்துரையாடி வருவதாகவும் சுகாதார அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

எனவே, எதிர்வரும் 03 – 06 மாதங்களுக்கு மருந்துகளை களஞ்சியப்படுத்தி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (29) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''குறித்த தொகை மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக இலக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கருத்துகளை ஏற்றுக்கொள்ள முடியாது. சில மாதங்களுக்கு முன்னர் எடுத்த கணக்கெடுப்புகளை அடிப்படையாகக் கொண்டே இந்தக் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. வைத்திய விநியோகப்பிரிவினால் முன்னெடுக்கப்படும் மருந்து மீளாய்வு கலந்துரையாடல்களில் இதுதொடர்பில் கலந்துரையாடியுள்ளோம்.

ஒரு சந்தர்ப்பத்தில் இன்சுலின் தொடர்பில் பிரச்சினை இருந்தது. இன்சுலினுக்கான விலைமனுவை பெற்றுக்கொண்ட விநியோகஸ்தர் குறித்த சந்தர்ப்பத்தில் தேவையான தொகையை பெற்றுக்கொடுக்காமையின் காரணமாகவே அந்த பிரச்சினை ஏற்பட்டிருந்தது. அதனால், ஒருசில நோயாளர்களுக்கு இன்சுலின் வழங்கும் அளவை குறைக்க வேண்டி ஏற்பட்டது.

கடந்த ஏப்ரல் 12ஆம் திகதி மூன்றரை மாதங்களுக்கு தேவையான இன்சுலினை நாட்டுக்கு கொண்டுவந்தோம். மேலும் இரண்டு மாதங்களுக்கு தேவையான இன்சுலின் தொகை நாட்டை வந்தடையும். மருந்து விநியோகத்தில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இல்லை என்று கூறமுடியாது. ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட கொள்முதல்களின் பிரச்சினைகளை தற்போது நாம் எதிர்கொள்கிறோம். எனவே, நாங்கள் இவற்றை மீளாய்வு செய்து கொள்முதலுக்கான கோரிக்கையை முன்வைத்ததுமே நாட்டை வந்தடையாது.

பொதுவாக விலைமனு கோரல் நடவடிக்கைகளுக்கு 03 – 06 மாதங்கள் தேவைப்படும். உற்பத்திக்கும் 03 - 04 மாதங்களாவது ஆகும். அதனடிப்படையில் பார்த்தால், அண்ணளவாக 09 மாதங்களாவது தேவைப்படும். அதற்கிடையில் ஒருசில மருந்து தொகை நன்கொடையாகவும் நாடுகளுக்கிடையிலான இணக்கப்பாட்டின் அடிப்படையில் பெற்றுக்கொள்ள முயற்சிப்போம். தேவையான மருந்துகளை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக 07 நாடுகளுடன் கலந்துரையாடி வருகிறோம்.

இலங்கையிலுள்ள விநியோகஸ்தர்களையும் புறந்தள்ளிவிட்டு வெளிநாடுகளிலிருந்து மருந்துகளை நேரடியாக பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. விநியோகஸ்தர்களையும் அந்த நாடுகளில் இருந்தே பெற்றுக்கொள்ள நேர்ந்துள்ளது. விநியோகஸ்தர்கள் முறையாக பணியாற்றாவிட்டால் நாங்கள் தலையிட்டு இராஜதந்திர மட்டத்தில் கலந்துரையாடி அந்த நாடுகளிலிருந்து மருந்துகளை இறக்குமதி செய்ய நேர்ந்துள்ளது.

எனவே, எதிர்வரும் 03 – 06 மாதங்களுக்கு மருந்துகளை களஞ்சியப்படுத்தி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். எனவே, விநியோகஸ்தர்கள் அவர்களின் தேவைக்கேற்ப மருந்து சந்தையை நிர்வகிப்பதற்கான வாய்ப்பு கிடைக்காது. ஆகவே, மருந்து விநியோகஸ்தர்களும் தற்போதைய சந்தர்ப்பத்தில் பழைய முறையில் செயற்படாமல் அவசியத்தை அறிந்து அதிகபட்ச வேகத்தில் மருந்து விநியோகத்தை மேற்கொள்ள வேண்டும். அதனை செய்யாதவர்கள் தொடர்பில் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை பதிவு நடைமுறைகளின்போது கவனம் செலுத்தப்படும்.

அதேபோன்று, நாடுகளுக்கிடையில் மருந்துகளை பெற்றுக்கொள்வதற்காக நேரடியாக தலையிடுவோம். இடைக்கிடை ஏற்படும் மருந்துத் தட்டுப்பாட்டுக்கு பதிலளித்துக்கொண்டிருக்கிறோம். அதேபோல், தனியார் சந்தையிலும் அவசியம் இருக்கிறது. அந்த தனியார் துறையினருக்கு தேவையான மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு அந்த நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்கியுள்ளோம். நாங்கள் பெயரிட்டுள்ள 862 மருந்து வகைகளில் ஓரிரு மருந்துகளுக்கு சிலநேரங்களில் தட்டுப்பாடு ஏற்படக்கூடும். மேலும், மருந்து விநியோகப் பிரிவை மாத்திரம் அவதானித்து விட்டு மாகாண மட்டத்திலுள்ள மருந்து இருப்புகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். இறக்குமதி என்ற நிலைப்பாட்டை உருவாக்கி அதிக விலையில் மருந்தை இறக்குமதி செய்வதற்கான தந்திரமும் மருந்து தட்டுப்பாடு என்ற பிரசாரத்தில் இருக்கிறது'' என்றார்.

# தினசரி பலாபலன்கள்

**விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 17 ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்** உங்களுக்கென எதையாவது இன்று வாங்குவீர்கள். மனத் துணிவுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள்.

**ரிஷபம்** குதர்க்கமான பேச்சுகள் வேண்டாம். பணம்,பொருள் கைமாறும் போது கவனமாகச் செயற்படவும்.

**மிதுனம்** நண்பர்கள் சந்திப்பால் நல்ல பலன் கிடைக்கும். உடல் நலம் சிறப்பாக அமையும். தெளிந்த சிந்தனையுடன் சேவையாற்றுவீர்கள்.

**கடகம்** செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும். எதிர்பாராத உடல் நலக் குறைபாடுகளால் செலவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்** தொழில்,வியாபாரத்தில் மேன்மை உண்டு. கைவிட்டுப் போனவை திரும்பக் கிடைக்கும். புகழ், செல்வாக்குடன் விளங்குவீர்கள்.

**கன்னி** புதிய முயற்சிகளில் வெற்றியும் இலாபங்களும் அமையும். யாரையும் நம்பி எதையும் ஒப்படைத்துச் செல்லாதீர்கள்.

**துலாம்** திட்டமிட்ட பிரயாணத்தால் ஓரளவு இலாபம் உண்டு. எதற்கும் அவசரம் வேண்டாம். பொறுமையோடு இருங்கள்.

**விருச்சிகம்** தொழில்,வியாபாரத்தில் அதிக எரிச்சல், கோபம் அடைவீர்கள். எதற்கும் பொறுமை இழந்து விடாதீர்கள்.

**தனுசு** காதல், திருமணம் கைகூடிவரும். பங்கு வியாபாரத்தில் வெற்றியுடன் அதிக இலாபம் கிடைக்கும்.

**மகரம்** நினைத்த காரியத்தில் அதிக முயற்சி இல்லாமலேயே வெற்றி. கடன் நிவர்த்தி. எதிரிகள் கட்டுப்படுவார்கள்.

**கும்பம்** உங்களது மனக்குறையை மற்றவர்கள் தீர்த்து வைப்பார்கள். உடல் நலத்தில் கவனம் வேண்டும்.

**மீனம்** குடும்பத்துடன் சந்தோஷமாக இருப்பீர்கள். உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும். வீண் பயம் வேண்டாம்.

| | |
|---|---|
| **திதி:** | திருதியை பி.ப.2.12 வரை பின் சதுர்த்தி |
| **நட்சத்திரம்:** | ரோஹிணி; பி.ப.4.18 வரை பின் மிருகசீரிடம் |
| **பிறை:** | வளர்பிறை |
| **யோகம்:** | சித்த யோகம் பி.ப.4.18 வரை பின் அமிர்த யோகம் |
| **வார சூலை:** | வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது. |
| **நல்ல நேரம்:** | காலை 5.56 – 7.26 மணி வரை காலை 8.56 – 9.56 மணி வரை பகல் 1.26 – 2.56 மணி வரைமாலை 3.56 – 4.56 மணி வரை |
| **ராகு காலம்:** | 11.56 – 1.26 மணி வரை |
| **எமகண்டம் :** | 7.26 – 8.56 மணி வரை |
| **குளிகை :** | 10.26 – 11.56 மணி வரை |

**சந்திராஷ்டமம்:** துலாம்-விருச்சிக ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும். (பின்னிரவு 3.14 வரை துலாம் ராசியினருக்கு)

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பிற்பகல் 4.18 மணி வரை**

அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், திருவாதிரை, பூசம், மகம், உத்தரம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி

**இன்று பிற்பகல் 4.18 மணிக்கு மேல்**

பரணி, ரோஹிணி, திருவாதிரை, புனர்பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**விஷேட தினம்:** அட்சய திருதியை, மங்கையக்கரசியார் குருபூசை

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325 078-6759739

# நாடளாவிய ரீதியிலுள்ள பயன்படுத்தப்படாத ஜனாதிபதி மாளிகைகளை பயனுள்ள வகையில் பயன்படுத்தத் திட்டம்

## தகவல்கள் சேகரிக்கப்படுவதாக அமைச்சர் கலாநிதி சந்தன அபேரத்ன தெரிவிப்பு



நாடளாவிய ரீதியில் ஜனாதிபதிக்காக ஒதுக்கப்பட்டுள்ள 9 சொகுசு மாளிகைகளில் இரண்டை மாத்திரம் வைத்துக்கொண்டு ஏனைய மாளிகைகளை பொருளாதார ரீதியில் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த மாளிகைகள் தொடர்பாக தகவல்களைச் சேகரிக்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி ஜனாதிபதி மாளிகைகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக பல்வேறு தரப்பிலிருந்தும் பத்துக்கும் மேற்பட்ட வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, யாழ்ப்பாணத்தில் காணப்படும் ஜனாதிபதி மாளிகை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உபயோகத்துக்கு பெற்றுக்கொள்வதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, நுவரெலியாவில் காணப்படும் ஜனாதிபதி மாளிகையை சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்காக ஈடுபடுத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மற்றும் கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகைகளை மாத்திரம் விசேட உற்சவங்களுக்கு பயன்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் வெளிநாட்டு அரச தலைவர்கள் நாட்டுக்கு வருகை தரும் சந்தர்ப்பங்களில் அவர்களை வரவேற்பதற்கும் சந்திப்புகளை மேற்கொள்வதற்கும் அந்த ஜனாதிபதி மாளிகைகள் தேவைப்படுவதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர், கண்டி பெரஹெரா நிகழ்வுகளை சம்பிரதாயபூர்வமாக நிறைவேற்றுவதற்காக கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகை அவசியமெனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலக நிர்வாகத்தின் கீழ் கொழும்பு, கண்டி, நுவரெலியா, மஹியங்கனை, அநுராதபுரம், கதிர்காமம், யாழ்ப்பாணம், எம்பிலிப்பிட்டி மற்றும் பெந்தோட்டை பிரதேசங்களில் ஜனாதிபதி மாளிகைகள் காணப்படுவதாகவும் கொழும்பு மற்றும் கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகைகள் தவிர்ந்த ஏனைய ஜனாதிபதி மாளிகைகள் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# பாணந்துறை துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலி

பாணந்துறை - ஹிரண பகுதியில் நேற்று (29) அதிகாலை நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 35 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.



துப்பாக்கிச்சூட்டில் 20 வயதான இளைஞரொருவர் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ஹிரண பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது குறித்த வீட்டில் சிலர் விருந்து பசாரத்தில் ஈடுபட்டிருந்ததாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# 19 இலட்சம் ரூபா நிதியில் அறநெறிப் பாடசாலை வவுனியா – பிரமணாலங்குளத்தில் திறந்துவைப்பு

*(நெல்லியடி நிருபர்)*

வவுனியா - பிரமணாலங்குளம், வடகாடு ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலைக்கான புதிய கட்டிடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர்.

சந்நிதியான் ஆச்சிரமத்தால் 19 இலட்சத்து 38 ஆயிரம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தை பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டித் திறந்து வைத்ததுடன், பெயர்ப் பலகையையும் திரை நீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து வெங்கல செட்டிக்குளம் பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர்களான தி.சிவகஜன், கி.சங்சுருவேணு, வெங்கல செட்டிக்குளம் பிரதேச செயலக உத்தியோகத்தர் சுஜேந்திரன், கிராம சேவையாளர் திருமதி சோபனா மற்றும் ஆலய பரிபாலன சபையினர் உட்படப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பஞ்சபுராணம் ஓதப்பட்டதுடன், வரவேற்பு நடனம், வரவேற்பு உரை என்பன இடம் பெற்றன. வடகாடு ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை, பெரியதம்பனை ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய அறநெறி மாணவர்களுக்கான சீருடைத் துணிகளும் இதன்போது வழங்கப்பட்டன.



இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையிலான தொண்டர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் மற்றும் கிராமமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கனடா தேர்தலில் வெற்றிபெற்றுள்ள லிபரல் கட்சிக்கு கனடிய தமிழர் பேரவை வாழ்த்து

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

கனடா தேர்தலில் வெற்றிபெற்றுள்ள லிபரல் கட்சிக்கும் தமிழ் கனடிய வேட்பாளர்களுக்கும் கனடிய தமிழர் பேரவை வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கனடிய தமிழர் பேரவை மேலும் தெரிவித்துள்ளதாவது,

2025 கூட்டாட்சித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள லிபரல் கட்சிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் கனடிய பிரதிநிதிகளுக்கும் கனடிய தமிழர் பேரவையின் வாழ்த்துகள்.

2025 கூட்டாட்சித் தேர்தலில் வெற்றி பெற்று அடுத்த கனடா கூட்டாட்சி அரசை அமைக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ள லிபரல் கட்சிக்கு கனேடிய தமிழர் பேரவை தனது இதயபூர்வமான வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

மக்களால் வெளிப்படுத்தப்பட்ட நம்பிக்கையை மதித்து நாட்டின் முன்னேற்றத்துக்கு புதிய அரசு உறுதியுடன் செயற்படுமென நாம் நம்புகின்றோம்.

இத்தேர்தலில் வெற்றி பெற்ற தமிழ் கனடிய உறுப்பினர்களுக்கும் கனடிய தமிழர் பேரவை பெருமிதத்துடன் வாழ்த்துகளைத் தெவித்துக் கொள்கிறது. கனடிய தமிழர் பேரவையின் முன்னாள் சட்ட ஆலோசகரான கரி ஆனந்தசங்கரி மீண்டும் தெரிவாகியுள்ளார்.

கனடிய தமிழர் பேரவையின் முன்னாள் துணைத் தலைவராக இருந்த ஜோனீட்டா நாதன் வரலாற்றுப் பெருமை வாய்ந்த முறையில் முதன்முறையாக பொதுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

இதனுடன், அனீட்டா ஆனந்தும் மீண்டும் பொதுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார். இந்த வெற்றிகள் தமிழ் கனடிய சமுதாயத்தின் அரசியல் ஈடுபாடு மற்றும் பங்களிப்பைத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன.

அரசியல் சார்பற்ற மற்றும் இலாப நோக்கமற்ற அமைப்பாக செயற்படும் கனடிய தமிழர் பேரவை, புதிய அரசுடன் இணைந்து அனைத்து கனடியர்களின் நலன்களையும் முன்னிலைப்படுத்தும் பணிகளிலும் செயற்படத் தயாராக இருக்கின்றது. புதிய அரசு மக்கள் விருப்பங்களை மதித்து ஒற்றுமை, சமத்துவம் மற்றும் வளர்ச்சியை முன்னேற்றும் நடவடிக்கைகளை எடுக்குமென நாங்கள் நம்புகின்றோம்.

அதேபோல், நாடு எதிர்கொள்கின்ற பொருளாதார மற்றும் அரசியல் சவால்களைத் திறமையாகச் சமாளித்து கனடாவின் உலகளாவிய நிலையை வலுப்படுத்தி அனைத்து கனடியர்களுக்கும் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்யும் நடவடிக்கைகளை புதிய அரசு எடுக்குமென நாங்கள் நம்புகின்றோம்.

கனடிய தமிழர் பேரவை புதிய அரசின் ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் வலுப்படுத்தும் முயற்சிகளில் தொடர்ந்து உறுதியாகக் கைகோர்க்கும்.

# தாவடி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தான கொடியேற்றம்



*(பு.கஜிந்தன்)*

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். தாவடி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தான கொடியேற்றம் நேற்று (29) பக்திபூர்வமாக இடம்பெற்றது.


கருவறையில் வீற்றிருக்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்மனுக்கு அபிஷேக, ஆராதனைகள் இடம்பெற்றன. மேளதாள வாத்தியங்கள் முழங்க அந்தண சிவாச்சாரியார்கள் வேதபாராயணம் ஓத, தேவஸ்தான பிரதம குருவான க.கணபதிராஜா குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் கொடியை ஏற்றிவைத்தனர்.

பல பாகங்களிலிருந்தும் வருகை தந்த பக்தர்கள் இந்தக் கொடியேற்றத்தில் கலந்துகொண்டு அம்பாளைத் தரிசித்தனர்.

கொடியேற்ற மஹோற்சவத்துக்கு தென்னிந்திய திரைப்பட நடிகரான ஜெய் ஆகாஷ் கலந்துகொண்டார்.



கொழும்பு விவேகானந்தா கல்லூரி
VIVEKANS NETBALL LEAGUE
நூற்றாண்டு விழாவை நோக்கிய பயணத்தில் மகளிர் தினத்தை முன்னிட்டு
பழைய மாணவிகளுக்கிடையிலான மாபெரும் வலைப்பந்தாட்ட போட்டிகள்
பங்கேற்கும் அணிகள்
- காளஸ்திகா
- ருத்ரா
- ஆர்யா
- வேலு நாச்சியார் படை
- நீலாம்பரி
இடம்
கொழும்பு விவேகானந்தா கல்லூரி மைதானம்
திகதி
04.05.2025
நேரம்
8.00 மணி முதல்



மாபெரும் இறுதிப் போட்டி அடங்கலாக மொத்தம் 13 போட்டிகள்
ஊடக அனுசரணை
அச்சு ஊடகம்
தமிழன் தமிழன் ஜீனியர்
இலத்திரனியல் ஊடகம்
தமிழ் 99.5 99.7

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 ஏப்ரல் 30 ஆம் திகதி, புதன்கிழமை

# ஊடகர் கொலைகளுக்கு சர்வதேச விசாரணை!

**ஊடகவியலாளர் படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை வேண்டும். இலங்கையில் இடம்பெற்ற சகல ஊடகவியலாளர் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று நடத்தப்படுவதன் மூலம் நீதியை நிலைநாட்ட புதிய அரசாங்கம் முன்வர வேண்டுமென யாழ். வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்தி நிற்கின்றது.**

**இலங்கையின் மிக முக்கிய ஊடகவியலாளர்களில் ஒருவராக சர்வதேச அளவில் புகழ்பெற்று விளங்கிய மாமனிதர் தராகி சிவராம் படுகொலை செய்யப்பட்டு 20 ஆண்டுகள் கடந்தும் இன்றுவரை உரிய விசாரணைகள் எவையுமின்றி ஆட்சிகள் மாறினாலும் தொடர்புடைய குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாமலும் அதற்கான நீதிப் பொறிமுறை உருவாக்கப்படாமலும் திட்டமிட்டு தவிர்க்கப்பட்டு வருகின்றமை இலங்கையின் உள்ளக பொறிமுறைக்குட்பட்டதான பாதுகாப்பு மற்றும் நீதித்துறை மீதான ஐயப்பாட்டை வலுப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.**

**யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் துப்பாக்கி முனையில் இடம்பெற்ற படுகொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள், கைதுகள் உள்ளிட்ட செயற்பாடுகள் மூலம் தமிழ் ஊடகத்துறையை அச்சுறுத்தி அடக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டு வந்த முனைப்புகள் தற்போதும் புதிய புதிய வடிவங்களில் தொடர்ந்தே வருகின்றன.**

**தமிழ் மக்களின் உரிமைக்குரலாக ஓங்கி ஒலித்து வரும் ஊடகத்துறையை நசுக்குவதனூடாக தமிழர்களின் குரலை மௌனிக்கச் செய்யும் நோக்கிலேயே இவை தொடர்கின்றன. இவ்வாறான செயற்பாடுகளின் பின்னணியில் இலங்கை அரச படைகள் மற்றும் அவர்களோடு சேர்ந்து இயங்கிய துணை ஆயுதக் குழுவினருமே இருந்துள்ளனர்; இருந்து வருகின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.**

**அவ்வாறிருந்தும் நிமலராஜன் முதல் சிவராம் உட்பட பல ஊடகவியலாளர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டும் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டமையுடன் தொடர்புடைய குற்றவாளிகளான மேற்குறித்த எவரொருவரும் நீதிப் பொறிமுறை ஊடாக கண்டுபிடிக்கப்படாத நிலையே தற்போதுவரை தொடர்கின்றது.**

**ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்கும் ஊடகத்துறை மீதான இவ்வாறான அச்சுறுத்தல் நிலையானது இலங்கையில் நிலவும் ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பவற்றின் மீதான கொடூரமான அடக்குமுறையின் வெளிப்பாடாகும்.**

**கொலைக் கலாசாரத்தின் பின்னணியில் ஊடகத்துறை மீதான இவ்வாறான தலையீடுகள் தொடர்வதை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதுடன் இலங்கையில் ஊடக சுதந்திரத்தை உறுதி செய்யும் வகையில் இதுவரைகாலமும் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை மூலம் நீதியை நிலைநாட்ட புதிய அரசாங்கம் உடனடியாக முன்வர வேண்டுமென படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் தராகி சிவராம் மற்றும் செல்வராசா ரஜிவர்மன் ஆகியோரின் நினைவு நாளில் யாழ். வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்திக் கோரியுள்ளது.**

**வடமராட்சி ஊடக இல்லம் தெரிவித்திருக்கும் கருத்துகள் நியாயமானவை. தமிழ் ஊடகத்துறையில் சிறந்து விளங்கிய பலர் கடந்த காலங்களில் கொலை செய்யப்பட்டனர். பலர் அச்சுறுத்தலுக்குள்ளாகினர். இவை தொடர்பில் எந்தவித விசாரணைகளோ ஏற்றுக்கொள்ளத்தக்க சட்ட நடவடிக்கைகளோ இடம்பெறவில்லை. ஒருசிலர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டாலும் உண்மையான குற்றவாளிகள் விசாரணை வலயத்துக்குள் வந்தார்களா என்பதில் இன்னமும் ஐயம் இருக்கிறது.**

**இன அழிப்புக்கு சர்வதேச விசாரணை கோரும் தமிழ்ச் சமூகம் ஊடகவியலாளர்களின் கொலைகளுக்கும் நீதிவேண்டி அதே பாணியிலான விசாரணைகளையும் வலியுறுத்தி நிற்கிறது. சர்வதேச சமூகம் இதனைக் கவனத்திற் கொள்ளவேண்டும். அதேசமயம், இதனை உலகுக்கு எத்திவைக்க தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ் புத்திஜீவிகளும் முழு முயற்சிகளை எடுக்க வேண்டும்.**

# அமைச்சரவைத் தீர்மானங்கள்




## 2025.04.28 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

01. உயர் கல்வி ஒத்துழைப்புகளுக்கான கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு மற்றும் சிங்கப்பூரின் தேசிய பல்கலைக்கழகத்துக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்,சிங்கப்பூர் குடியரசின் தேசிய பல்கலைக்கழகம் மற்றும் இலங்கையின் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

02. பொருளாதாரக் கணக்கெடுப்பு – 2025 / 26

2025 ஆம் ஆண்டில் விவசாய நடவடிக்கைகள் மற்றும் 2026 ஆம் ஆண்டில் விவசாயம் சாராத நடவடிக்கைகளைக் கணக்கெடுப்புக்கு உள்ளடக்கும் வகையில் பொருளாதாரக் கணக்கெடுப்பு 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் நடத்துவதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

03. கொரிய சர்வதேச ஒத்துழைப்புகள் முகவராண்மை நிதியுதவியுடன் கொழும்பு மாநகர சபைக்கான பூரண தன்னியக்க வரி அறவீட்டு முறைமையொன்றை நிறுவுதல்

வீத வரி, அனுமதிப்பத்திர வரி, வர்த்தக வரி மற்றும் முத்திரைக் கட்டணம் போன்ற நால்வகை (04) வரி வருமான வழிகள் மூலம் கொழும்பு மாநகர சபைக்கு அதிகளவு வரி வருமானம் கிடைக்கின்றது. குறித்த நால்வகை வருமான வழிகளை தானியங்கச் செயற்பாடாக மாற்றுவதன் மூலம் வருமானத்தை அதிகரிப்பதற்காக கொழும்பு மாநகர சபை, பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஆகியன இணைந்து கொரிய சர்வதேச ஒத்துழைப்புகள் முகவராண்மை நிறுவனத்துக்கு கருத்தாக்கப் பத்திரமொன்றை சமர்ப்பித்துள்ளது.

கொரியா சர்வதேச ஒத்துழைப்புகள் முகவராண்மையால் வழங்கப்படுகின்ற நிதியுதவியைப் பயன்படுத்தி கொழும்பு மாநகர சபையின் வரி வருமான வழிகளை தானியங்கச் செயற்பாடாக மாற்றும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான உடன்பாடு தொடர்பான ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

04. 2569 ஆவது ஸ்ரீ பௌத்த வருடத்தின் வெசாக் மஹோற்சவம்

நுவரெலியா சர்வதேச பௌத்த நிலைய விகாரையை மையமாகக் கொண்டு தேசிய வெசாக் மஹோற்சவத்தை நடத்துவதற்கும் 2025 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை வெசாக் வாரமாகப் பிரகடனப்படுத்துவதற்கும் குறித்த காலப்பகுதியில் பல்வேறு பௌத்த மத நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்து நடைமுறைப்படுத்துவதற்கும் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

05. கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களின் விடயதானங்களுக்கமைவான சட்டங்களைத் திருத்தம் செய்தல்

இலங்கையின் பொருளாதார நிலையுரு மாற்றங்களுக்கு பலம்வாய்ந்ததும் பொருத்தமானதுமான நிறுவன ரீதியான கட்டமைப்பை உருவாக்குவதற்காக கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களின் விடயதானங்களுக்கமைவான ஒருசில சட்டங்களை இவ்வாண்டில் திருத்தம் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, கீழ்க் குறிப்பிடப்படும் சட்டங்களைத் திருத்தம் செய்வதற்காகவும் குறித்த சட்டதிருத்தங்களை 2025 ஆம் ஆண்டின் சட்ட வரைவாக்க வேலைத்திட்டத்தில் உள்வாங்குவதற்கும் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகாரசபைச் சட்டம் -

1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம் -

2009 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க இலங்கை நெசவு மற்றும் ஆடைக் கைத்தொழில் நிறுவனங்கள் சட்டம் -

1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் -

2006 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் மற்றும் 2014 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம் -

1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் இணை நிறுவனங்கள் சட்டம் -

1996 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் இணை நிறுவனங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் -

06. 1956 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டம்-

1956 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்காக சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை மீண்டும் அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் பெருந்தோட்டத்துறை மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

07. பெருந்தோட்டத்துறை மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் விடயதானத்துக்குரிய புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் தற்போதுள்ள சட்டங்களைத் திருத்தம் செய்தல்

பெருந்தோட்டத்துறை மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் விடயதானத்துக்குரிய அரச கொள்கைகளின் முன்னுரிமைக்கமைய, 2025 ஆம் ஆண்டில் தற்போதுள்ள சட்டங்களைத் திருத்தம் செய்தல் மற்றும் புதிதாக சட்டங்களைத் தயாரிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, கீழ்க்காணும் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் சட்டங்களைத் திருத்தம் செய்தல் 2025 ஆம் ஆண்டின் அரச சட்ட வரைவாக்க வேலைத்திட்டத்தில் உள்வாங்குவதற்காக பெருந்தோட்டத்துறை மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

1958 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந்தோட்டங்கள் (கூறுபோடல் கட்டுப்பாட்டு) சட்டத்தைத் திருத்தம் செய்தல் -

2005 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்ற சட்டத்தைத் திருத்தம் செய்தல் -

2000 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேயிலைச் சக்தி நிதியச் சட்டத்தைத் திருத்தம் செய்தல் -

1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேயிலை கட்டுப்பாட்டுச் சட்டத்தைத் திருத்தம் செய்தல் -

1956 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தைத் திருத்தம் செய்தல் -

பெருந்தோட்ட முகாமைத்துவச் சட்டமெனப் புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்தல் -

துருசவிய சங்கங்களின் அதிகாரங்களை இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்துக்கு ஒப்படைப்பதற்கான புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தல் -

1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்திச் சட்டத்தைக் சமகாலத் தேவைகளுக்கேற்ப புதிய ஒழுங்குவிதிகளை உள்வாங்கக்கூடிய வகையில் குறித்த சட்டத்தைத் திருத்தம் செய்தல் -

1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தேயிலை சபைச் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பான திருத்தங்களை மேற்கொள்ளல் -

08. அரச கரும மொழிகள் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமித்தல் -

புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சின் மேலதிக செயலாளராகப் (கலாசார மேம்பாடு) பணிபுரிந்த இலங்கை நிர்வாக சேவை விசேடதர அதிகாரியான திலக் நந்தன ஹெட்டியாரச்சியை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அரச கரும மொழிகள் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமிப்பதற்கு நீதி, தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

09. இலங்கையின் பண்டாரநாயக்க இராஜதந்திர பயிற்சி நிறுவகம் மற்றும் வியட்நாமின் இராஜதந்திர சர்வதேச விஞ்ஞான நிறுவகத்துக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்

சிக்கலான சமகால உலகில் ஒருவருக்கொருவர் நெருக்கமாகத் தொடர்பு கொண்டுள்ள இருதரப்பு, பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்களுக்கான புதிய கருத்துகள் மற்றும் அபிப்பிராயங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் பொதுவாக ஆர்வங்காட்டுகின்ற துறைகளில் பரஸ்பரமாக நன்மையளிக்கின்ற ஒத்துழைப்புகளைப் பேணிச் செல்வதற்காக நிறுவன ரீதியான தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு இலங்கை வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் கீழ் இயங்குகின்ற பண்டாரநாயக்க இராஜதந்திர பயிற்சி நிறுவகம் மற்றும் வியட்நாமின் இராஜதந்திர சர்வதேச விஞ்ஞான நிறுவகத்துக்குமிடையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய, மூன்று (03) ஆண்டுகளுக்கு செல்லு படியாகும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருதரப்புகளும் கையொப்பமிடுவதற்காக வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

10. இலங்கை கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு மற்றும் வியட்நாம் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுக்குமிடையிலான இயந்திர உபகரணங்கள் தயாரிப்புக்கான ஒத்துழைப்புகள் பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புதுப்பித்தல்.

இரு நாடுகளுக்கிடையில் மின் உபகரணங்கள் மற்றும் பிற உபகரணங்கள் தயாரிப்பு உள்ளிட்ட இயந்திர உபகரணங்கள் மற்றும் இத்துறையின் இருதரப்பு ஒத்துழைப்புகளையும் மேம்படுத்துவதற்காக முன்பிருந்த கைத்தொழில் விடயதான அமைச்சு மற்றும் வியட்நாம் சோஷலிசக் குடியரசின் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் 2011 ஆம் ஆண்டு கையொப்பமிடப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்கிடையிலும் இடம்பெற்ற வர்த்தகம் தொடர்பான உபகுழுவின் இரண்டாவது கூட்டத்தில் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் புதிப்பிப்பதற்கு இருதரப்புகளும் உடன்பாடு தெரிவித்துள்ளன.

அதற்கிணங்க, முன்னேற்றகரமான தொழில்நுட்பங்களைப் பரிமாற்றிக்கொள்வதற்கான வசதிகளை ஏற்பாடு செய்வதற்கும் மற்றும் உள்நாட்டுப் பங்காளர்களுக்கான பயிற்சி மற்றும் இயலளவு விருத்தியைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வசதிகளை வழங்கி, திருத்தங்களை உட்சேர்த்து இற்றைப்படுத்தப்பட்ட இயந்திரோபகரணங்கள் தயாரிப்புக்கான ஒத்துழைப்புகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

11. வியட்நாம் வர்த்தக மேம்படுத்தல் நிறுவனம் (VTETRADE) மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திடுதல்.

இலங்கை மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுக்கிடையிலான வர்த்தக ஒத்துழைப்பைப் பலப்படுத்துவதற்காக வியட்நாம் வர்த்தக மேம்படுத்தல் நிறுவனம் மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, வியட்நாம் வர்த்தக மேம்பாட்டு நிறுவனம் மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கு கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

(தொடர்ச்சி 05ஆம் பக்கம்)

## இன்றைய நாளில்...

- 1870 – புறக்கோட்டையில் முஸ்லிம்களுக்கெதிரான கலவரம் இடம்பெற்றது.
- 1897 – ஜெ. ஜெ. தோம்சன் அணுவடித்துகளாக இலத்திரனைக் கண்டுபிடித்ததாக இலண்டனில் அறிவித்தார்.
- 1955 – இந்திய இம்பீரியல் வங்கியின் பெயர் பாரத ஸ்டேட் வங்கி என மாற்றம் செய்யப்பட்டது.
- 1961 – கே-19 என்ற முதலாவது சோவியத் அணுக்கரு ஆற்றல் மூலம் இயங்கும் நீர்மூழ்கி கப்பல் சேவைக்கு விடப்பட்டது.
- 1982 – திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 1991 – யாழ்ப்பாணம் நீராவியடியில் நிகழ்ந்த வெடி விபத்தில் 12 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்.

## நக்கல் நமசிவாயம்

***தேர்தல் நாளும் நெருங்குது... ஆனால் தேர்தல் களையே இல்லாமல் இருக்குது... முன்னரெல்லாம் தேர்தல் என்றால் ஒரே திருவிழாதான்...***



# அசிதிசி ஊடக புலமைப் பரிசில் திட்டம் – 2025

## அமைச்சினூடாக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

இலங்கை ஊடகவியலாளர்களின் தொழிற்றகைமையை முன்னேற்றும் நோக்கில் வருடாந்தம் நடைமுறைப்படுத்தப்படும் அசிதிசி ஊடகப் புலமைப்பரிசில் திட்டம் இம்முறை சுகாதார மற்றும் ஊடக அமைச்சினூடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அசிதிசி ஊடக புலமைப்பரிசில் திட்டம் - 2025 திட்டத்துக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய இறுதித் திகதி 2015 மே மாதம் 23 ஆகும்.

மூன்று வருட கால சேவையைப் பூர்த்திசெய்துள்ள நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் முழு நேரமாக அல்லது பகுதி நேர அடிப்படையில் பணியாற்றும் 18 தொடக்கம் 55 வயதுக்கு இடைப்பட்ட ஊடகவியலாளர்கள், சுதந்திர ஊடகவியலாளர்கள், பிரதேச ஊடகவியலாளர்கள், இணையதள ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத் தொழில்நுட்ப நிபுணர்கள் இந்தப் புலமைப்பரிசில் திட்டத்துக்காக விண்ணப்பிக்க முடியும்.

மேலும், விண்ணப்பிக்கும் பாடநெறி நேரடியாக ஊடகத்துறையுடன் சம்பந்தப்பட்ட பாடநெறியாக இருப்பதுடன், விண்ணப்பதாரர் அரசாங்க தகவல் திணைக்களத்தால் 2025ஆம் ஆண்டுக்காக வழங்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டும்.

ஊடகவியலாளர்களுக்கு இந்தப் புலமைப்பரிசில் முறையூடாக 2 பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், முதல் புலமைப்பரிசில் வழங்கப்பட்டு ஐந்து வருடங்கள் நிறைவடைந்த பின்னர் இரண்டாவது சந்தர்ப்பத்துக்காக விண்ணப்பிக்க முடியும்.

இந்தப் புலமைப்பரிசில் திட்டத்தின் ஊடாக பட்டம் மற்றும் பட்டப்பின்படிப்பு போன்றவற்றுக்காக ஆகக் கூடுதலாக இரண்டு இலட்சம் (ரூ. 2,00,000/-) ரூபா நிதி மற்றும் நீண்டகால மற்றும் குறுங்கால சான்றிதழ் கற்கைகளுக்காகவும் ஒரு இலட்சம் ரூபா (ரூ. 1,00,000/-) நிதி வழங்கப்படும்.

புலமைப்பரிசிலுக்காக வாய்ப்புக் கிடைத்த ஊடகவியலாளர்களுக்கு பாடநெறிக்காக செலுத்தப்படும் பணத்தின் ஐம்பது வீதத்தை (50%) பாடநெறி ஆரம்பத்தில் முதல் தவணையாகவும் மிகுதி 50% வீதத்தில் 25% வீதத்தை பாடநெறியின் இரண்டாவது தவணையாகவும் மீதி 25% வீதத்தை பாடநெறி பூரணப்படுத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னரும் மேற்கொள்ளப்படும்.

சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவால் விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு புலமைப்பரிசில் பெறுபவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

இதற்காக அனுப்பப்படும் சகல விண்ணப்பங்களும் 2025.05.23ஆம் திகதி அல்லது அன்றைய தினத்துக்கு முன்னர் பணிப்பாளர் (ஊடகம்), சுகாதார மற்றும் ஊடக அமைச்சு, இலக்கம் 163, 'அசிதிசி மெதுர', கிருலப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொட, கொழும்பு - 5 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது www.media.gov.lk அமைச்சின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள க்யூ ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்து நிகழ்நிலை ஊடாக அனுப்ப முடியும்.

'அசிதிசி ஊடகப் புலமைப் பரிசில் திட்டம் 2025' தொடர்பான மேலதிக தகவல்களை 0112513645/ 0112514632 என்ற தொலைபேசி இலக்கத்தில் அல்லது மாதிரி விண்ணப்பப் படிவத்தை www.media.gov.lk என்ற இணையதளத்துக்குள் பிரவேசித்துப் பெற்றுக்கொள்ள முடியும்.

# மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரனின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்திய சமூக ஊடகப் பதிவு

## பதிவிட்டவர் குறித்து விசாரணை மேற்கொள்ள நீதிமன்றம் உத்தரவு

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரனின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் தகவல்களைப் பதிவிட்டதாகக் கூறப்படும் 6 சமூக ஊடக கணக்குகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு கொழும்பு மேலதிக நீதவான் தனுஜா லக்மாலி நேற்று முன்தினம் (28) அனுமதி வழங்கியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை வழக்கிலிருந்து பிள்ளையான் என அழைக்கப்படும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரனின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் பல தகவல்கள் சமூக ஊடகங்களில் பரவின.

இந்நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரன் நீதிமன்ற உடையில் இருக்கும் புகைப்படங்களும் சமூக ஊடகங்களில் பரவின.இது தொடர்பில் நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரன் குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடளித்திருந்தார்.

எனவே, இவ்வாறு தகவல்களைப் பகிர்ந்த 6 சமூக ஊடக கணக்குகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் கோரிக்கையை பரிசீலித்த நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

# மன்னார் மாவட்டத்தில் வள சுரண்டல்கள் அடக்குமுறைக்கெதிராக மே தின ஊர்வலம்

## மக்கள் திட்ட வரைபு ஒன்றியம் அழைப்பு

(ஜோசப் நயன்)

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அடக்குமுறை, வளச் சுரண்டல்களுக்கெதிராகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரியும் மே தின நிகழ்வுகள் மன்னாரில் முன்னெடுக்கப்பட வுள்ளதாக மக்கள் திட்ட வரைபு ஒன்றியத்தின் வட மாகாண பொதுச் செயலாளர் நடராஜா தேவகிருஷ்ணன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று (29) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடக்கு முறைக்கும் வளச் சுரண்டல்களுக்கும் எதிராக மே தினத்தை நினைவுகூரி வந்துள்ளோம். இந்த நிலையில், இலங்கை ரீதியாக உள்ள தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், அனைவரையும் ஒன்றிணைத்து முதல் முதலாக



சுரண்டல் மற்றும் அடக்குமுறைக்கெதிராக மன்னார் நகரில் மே தின நிகழ்வை முன்னெடுக்கவுள்ளோம்.

மன்னாரில் வளச் சுரண்டல்கள் இடம்பெற்று வருவதோடு, மீனவர்கள் பாதிப்பு மற்றும் காணிகள் அபகரிப்புகள் மன்னார் மாவட்டத்தில் அதிகமாக இடம்பெற்று வருகின்றன.இலங்கை - இந்திய ஒப்பந்தம், அமெரிக்க- இலங்கை ஒப்பந்தம் வருகிறபோது, காற்றாலைத் திட்டங்களை முன்னெடுக்கின்றபோது மீனவர்களின் வாழ்வாதாரங்கள் ஒட்டுமொத்தமாகப் பாதிக்கப் படுகின்றன.

திட்டமிட்ட இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்கள் காரணமாக எமது மீனவர்கள் பாரிய நெருக்கடியைச் சந்திக்கிறார்கள். மேலும் தொடர்ச்சியாக மன்னாரில் உள்ள வளங்களைச் சுரண்டுகின்ற பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றன. இதனை கருத்திற்கொண்டு இதற்கெதிராக குரல் கொடுக்கும் வரையில் இலங்கையிலுள்ள விவசாயிகள், மலையக மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து மன்னார் நகரில் ஒன்று கூடி குறித்த திட்டங்களுக்கெதிராகவும் மன்னார் மக்களுக்கு ஆதரவாகவும் மே தினப் பேரணி மற்றும் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளோம்.

நாளை (01) மாலை 3 மணிக்கு மன்னார் பஜார் பகுதியில் மே தினக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

மே தின ஊர்வலம் பிற்பகல் 2 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகி வைத்தியசாலை வீதியூடாக மன்னார் பஜார் பகுதியைச் சென்றடையும். பின்னர் அங்கு மே தினக் கூட்டம் இடம்பெறும்.

மன்னார் மாவட்டம் உள்ளடங்கலாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் இடம்பெற்று வருகின்ற பல்வேறு பிரச்சினைகள் குறிப்பாக, இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் ஒரு மாயையான தோற்றத்தை உருவாக்கியுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான ஒரு தீர்வை முன்வைக்க ஜனாதிபதியால் முடியும். அவர்கள் இருக்கிறார்களா, இல்லையா என்பதையும் அவரால் கூறமுடியும்.

மேலும் காணி அபகரிப்புகளும் பல்வேறு முறைகளில் இடம்பெற்று வருகின்றன.

நாட்டின் அனைத்து மாகாணங்களிலிருந்தும் மன்னாரில் இடம்பெறவுள்ள மே தின ஊர்வலம் மற்றும் கூட்டத்தில் கலந்துகொள்ள மன்னாருக்கு மக்கள் வருகை தரவுள்ளனர்.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அடக்குமுறை களுக்கெதிராகவும் வள சுரண்டல்களுக்கெதிராகவும் குரல் கொடுக்கும் வகையில் மே தின நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

# பெலியத்த பஸ் விபத்தில் 30 பேர் காயம்



பெலியத்த பகுதியில் நேற்று (29) காலை இடம்பெற்ற பஸ் விபத்தில் 30 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பெலியத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெட்டியாரச்சி வளைவில் தனியார் பஸ் ஒன்றும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்தில் காயமடைந்தோர் பெலியத்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பெலியத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# குறிகட்டுவான் இறங்குதுறையிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாண ஒரு குழு

## நியமிக்குமாறு அமைச்சர் பிமல் ரத்நாயக்க பணிப்பு

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க நெடுந்தீவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது, குறிகட்டுவான் இறங்கு துறையில் பாரிய சிக்கல்கள் இருப்பதை அவதானித்தார்.

அதிக பயணிகள் நெரிசல் ஏற்படும் போது, நெடுந்தீவுக்கான படகுச் சேவைகள் பற்றாக்குறை, பயணிகள் நிற்கும் இடங்களின் குறைபாடுகள், படகு நிறுத்துமிட வசதிகளின் குறைபாடு, மோசமான சுகாதார வசதிகள், போதுமான காத்திருப்பு வசதிகள் இல்லாதது, சில மோசமான வசதிகள் மற்றும் படகுத்துறையின் சேதமடைந்த நிலை ஆகியவற்றை அமைச்சர் அவதானித்தார். மேலும், பண்டப் போக்குவரத்தும் இந்தத் துறைமுகத்தில் மிகவும் சிரமங்களை எதிர்கொள்கிறது.



இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கே.இளங்குமரன் உள்ளிட்ட தொடர்புடைய அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழுவை நியமித்து அனைத்துப் பிரச்சினைகளையும் விரிவாக ஆராய்ந்து பொருத்தமான திருத்த நடவடிக்கைகளை எடுக்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

# ஒப்பந்த அடிப்படையில் கொலைசெய்யும் சந்தேகநபர்கள் நால்வர் களுத்துறையில் கைது

நபரொருவரைப் படுகொலை செய்ய முயற்சித்த முன்னாள் இராணுவ வீரர் உட்பட நால்வர் கொண்ட குழு களுத்துறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளது.

களுத்துறை பண்டாரகம பிரதேசத்தில் கடந்த 17ஆம் திகதி வர்த்தகரொருவர் கூரிய கத்தியால் தாக்கப்பட்டு படுகாயமடைந்திருந்தார்.

சம்பவம் குறித்து விசாரணைகளை மேற் கொண்ட பொலிஸார், பாணந்துறை, பயாகலை, பண்டாரகம, ஊரகஹ பிரதேசங்களைச் சேர்ந்த நால்வரை சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் (28) கைதுசெய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் 30, 32, 36 மற்றும் 51 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நால்வரும் தமிழ்த்திரைப்பட பாணியில் களுத்துறை பிரதேசத்தில் ஒப்பந்த அடிப்படையில் அடிதடி, படுகொலை முயற்சிகள், வாள்வெட்டுத் தாக்குதல் போன்ற அடாவடிகளில் ஈடுபடும் அடியாட்கள் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன், பிரதேச வர்த்தகர்களை அச்சுறுத்தி கப்பம் பெற்று வந்துள்ளமையும் தெரிய வந்துள்ளது.

மேலும், குற்றச் சம்பவத்துக்குப் பயன்படுத்தப் பட்டதாகக் கூறப்படும் வாள், இரண்டு கத்திகள் மற்றும் மூன்று தொலைபேசிகள் என்பன பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்கள் கடந்த ஆண்டு பாணந்துறையில் உள்ள ஒரு பெரிய ஆடைத் தொழிற்சாலையில் ஒருவரை வெட்டிக்கொலை செய்த முக்கிய சந்தேகநபர்களென விசாரணை களில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களை களுத்துறைப் பொலிஸார் முன்னெடுத்துள் ளனர்.

# பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் 96 மாணவர்கள் இம்முறை பல்கலைக்கு தகுதி

(அஷ்ரப் ஏ. சமத்)

கடந்த வாரம் வெளியாகியிருந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப் படையில் பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் 7 மாணவிகள் 3 ஏ சித்தி களையும் 7 மாணவிகள் 2 ஏ சித்திகளையும் பெற்றுள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றிய 159 மாணவர்களுள் 96 மாணவிகள் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளதாக கல்லூரி அதிபர் திருமதி யோகராணி சிவபாலன் தெரிவித்துள்ளார். அத்துடன், பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தனது வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

ரமேஷ் கேசினி, ஜெயராஜ் மிதுனியா, ராஜகுமார் சஞ்சிதா, சுவாமிநாதன் சர்மா நந்தனி, ராஜசேகரன் லதுஷனா, சக்திவேல் சமங்கரி, சிவகுமார் லக்ஷனயா, இராமச்சந்திரன் வினோதனி, ஜெகதீசன் அபிலக்ஷாயினி, பரமேஸ்வரா அந்தோனி பிரேந்தனி, ஸ்ரீதர் ஸ்ரீ லிஷாந்தினி, கனகராஜ் லிகேஷினி, அழகர்சாமி ரசிகா, கனகரத்தினம் தேவிகா ஆகிய மாணவர்கள் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களாவர்.

## 4ஆம் பக்கத் தொடர்ச்சி...

12. நில மேற்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சூரிய மின்னழுத்த மின்னுற்பத்தி நிலையங்களிலிருந்து 152 மெகாவோட் மின்சாரத்தைப் பெறுதல்.

2023 – 2042 நீண்டகால உற்பத்தித் திட்டத்துக்கமைய 2030 ஆண்டளவில் வலுசக்தி தேவையின் 70 சதவீதத்தை மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலம் பூர்த்தி செய்வதே அரசின் கொள்கையாகும். அதற்கமைய, எதிர்பார்க்கப்படும் மின்சாரத்தின் கேள்வி படிப்படியாகக் குறைவடைதல் மற்றும் கூரைகளில் பொருத்தப்படும் சூரிய மின்சக்திக் கட்டமைப்பின் கொள்ளளவு அண்மைக்காலத்தில் வேகமாக அதிகரிப்பதைக் கருத்திலெடுத்து, மின்வலுக்கட்டமைப்பின் 18 உப நிலையங்களுக்கு ஒதுக்கப்படக்கூடிய 152 மெகாவோட் நில மேற்பரப்பில் நிர்மாணிக்கப்படும் சூரிய மின்னழுத்தக் கொள்ளளவு இனங்காணப்பட்டுள்ளது. மேற்குறித்த 152 மெகாவோட் மின்வலு வலையமைப்புக் கொள்ளளவை சர்வதேச போட்டி விலைமனு கோரல் செயன்முறைக்கு மட்டும் ஒதுக்குவதற்கும் திட்டத்துக்கென நிர்மாணித்தல், உரிமை கொள்ளல் மற்றும் அமுல்படுத்தல் எனும் அடிப்படையில் திட்டத்தை அபிவிருத்தி செய்பவர்களிடமிருந்து மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான முன்மொழிவுக் கோரிக்கைகளை வெளியிடுவதன் மூலம் விலைமனு கோரல் செயன்முறையை ஆரம்பிப்பதற்கும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

13. விவசாயத்துறையின் ஒத்துழைப்புக்கான இலங்கை விவசாயத் திணைக்களம் மற்றும் வியட்நாம் விவசாய விஞ்ஞான கலாசாலை ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திடுதல்.

இலங்கை விவசாயத் திணைக்களம் மற்றும் வியட்நாம் விவசாய விஞ்ஞான கலாசாலை ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் வரைபுக்கு வெளிவிவகார அமைச்சின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய, மேற்குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்காக விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

14. அரச வாணிப தொழில்முயற்சி முகாமைத்துவ சட்டமூலம்

அரசுக்குச் சொந்தமான வர்த்தகக் கம்பனிகள் சிறந்த முகாமைத்துவத்துடன் தேவையான மறுசீரமைப்பை மேற்கொண்டு இயக்குவதற்குத் தேவையான புதிய சட்டரீதியான வரையறையை அறிமுகம் செய்வதற்காக 'அரச வாணிப தொழில்முயற்சி முகாமைத்துவ சட்டமூலம்' எனும் பெயரிலான அடிப்படைச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதன்மூலம் அரச தொழில்முயற்சிகள் மீதான அரசியல் அழுத்தங்களை முழுமையாக நீக்குதல், தொழில்முயற்சிகளின் பணிப்பாளர் சபைகளில் தொழில் தகைமையுள்ள, துறைசார் நிபுணர்களை நியமிக்கலாம். அதற்கமைய, மேற்குறித்த ஆரம்ப வரைபை மீளாய்வு செய்து மேலும் மேம்படுத்துவதற்கு பொருத்தமான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்காக கீழ்க்காணும் விசேட குழுவை நியமிப்பதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

★ (கலாநிதி) அனில் ஜயந்த பெர்னாண்டோ,
தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் - (தலைவர்)

★ சுனில் ஹந்துன்னெத்தி,
கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர்

★ வசந்த சமரசிங்ஹ,
வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்

★ (கலாநிதி) ஹர்ஷன சூரியப்பெரும,
நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர்.

# கடந்த இரண்டு தேர்தல்களையும் விட இம்முறை குறைவடைந்துள்ள தேர்தல் விதி மீறல்கள்

## ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல்

தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கைகள் மற்றும் ஊடக வெளியீடுகளின்படி, தற்போதைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்தில் தேர்தல் சட்ட மீறல்களில் குறிப்பிடத்தக்களவு குறைவாக ஏற்பட்டுள்ளதை அவதானிப்பதாக ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஶ்ரீலங்கா (TISL) தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பொதுவான முன்னேற்றம் காணப்பட்ட போதிலும், விதிமீறல்கள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், அவை பெரும் கவலையை ஏற்படுத்துகின்றன. பொருட்களை விநியோகிப்பதன் மூலம் வாக்குகளை விலைக்கு வாங்குதல், தாக்குதல்கள் மற்றும் சொத்துச் சேதம் உள்ளிட்ட வன்முறைகள் மற்றும் தேர்தல் நோக்கங்களுக்காக பொதுச் சொத்துகளைப் பயன்படுத்துதல் ஆகியவை தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. கடந்த தேசிய தேர்தல்களுடன் ஒப்பிடுகையில், இத்தகைய மீறல்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாலும் அவை தொடரும் நிலை ஜனநாயகத்தின் நேர்மையைத் தளர்த்துவதோடு, தேர்தல் செயல்முறையின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையையும் சிதைக்கிறது.

ஆளும் கட்சிப் பிரதிநிதிகளை அதிக எண்ணிக்கையில் தேர்ந்தெடுக்கும் உள்ளூராட்சிப் பிரிவுகளுக்கு முன்னுரிமையளிப்பதாக ஜனாதிபதி வெளியிடும் சர்ச்சைக்குரிய பொது அறிக்கைகள் கவலையை அதிகரிக்கின்றன. இத்தகைய கருத்துகள், வாக்காளர் சுதந்திரத்தின் மீது முறையற்ற செல்வாக்குச் செலுத்தப்படுவதற்கான தீவிர கவலைகளை எழுப்புகின்றன. மேலும், செயற்படும் ஜனநாயகத்துக்கு அவசியமான சமத்துவம், பாரபட்சமின்மை, பொறுப்பான தலைமைத்துவம் ஆகிய கொள்கைகள் கவலைக்குரிய வகையில் புறக்கணிக்கப்படுவதையும் இது வெளிப்படுத்துகிறது.

இந்த அணுகுமுறை, தகுதியை விட கட்சி விசுவாசத்துக்கு முக்கியத்துவமளிக்கும் அரசியல் கலாசாரத்தை நிலைநிறுத்தும் அபாயத்தைக் கொண்டுள்ளது. மேலும், தேர்தல் காலங்களில் பொது வளங்கள் பேரம்பேசும் பொருட்களாகக் கருதப்படும் நிலைக்கும் இது வழிவகுக்கிறது. குறிப்பாக, மிக உயர்ந்த நேர்மை தேவைப்படும் தேர்தல் காலங்களில், உயர் மட்டத் தலைமைத்துவம் நல்லாட்சிக்கான தரத்தை உறுதிசெய்ய வேண்டும்.

நாடு தேர்தல் காலத்தின் இறுதி இரண்டு வாரங்களை நெருங்கிக்கொண்டிருக்கின்ற நிலையில், இந்த முன்னேற்றத்தைப் பாதுகாப்பதும், தேர்தல் செயல்முறையில் ஏற்படும் எந்த விதிமீறல்களையும் உடனடியாகவும் திறம்படவும் கையாள்வதும் மிக முக்கியமாகிறது. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை உறுதிசெய்வதற்கும் தேர்தல் முடிவுகளின் நம்பகத்தன்மையைப் பாதிக்கக்கூடிய எந்தவொரு செயலையும் தவிர்ப்பதற்கும் மீண்டும் தங்களை அர்ப்பணிக்குமாறு அனைத்து அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் பொது அமைப்புகளை TISL கேட்டுக்கொள்கிறது.

# மத்திய வங்கி நிதியியல் அறிக்கைகள் – தொழிற்பாடுகள் தொடர்பான அறிக்கை ஜனாதிபதி அநுரவிடம் கையளிப்பு







இலங்கை மத்திய வங்கியின் 2024ஆம் ஆண்டுக்கான நிதியியல் அறிக்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான அறிக்கையை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க நேற்று (29) ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் கையளித்தார்.

அறிக்கையின் பிரதியொன்றை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவால் ஜனாதிபதி செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவிடமும் கையளிக்கப் பட்டது.

இந்த நிகழ்வில் மத்திய வங்கியின் உயர் அதிகாரிகள் சிலரும் கலந்துகொண்டனர்.

# தேசபந்துவின் மோசடிகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட குழு இன்று கூடுகிறது

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தனது பதவித் தத்துவங்களைப் பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து அதன் வெளிப்படுத்தல்களை அறிக்கையிடுவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு நேற்று முன்தினம் (28) பாராளுமன்றத்தில் மூன்றாவது தடவையாகவும் கூடியது.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தனது பதவித் தத்துவங்களை பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து அதன் வெளிப்படுத்தல்களை அறிக்கையிடுவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்க பொலிஸ் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது.

பொலிஸ் மா அதிபர் ரி.எம்.டபிள்யூ.தேசபந்து தென்னக்கோன் தனது பதவித் தத்துவங்களைப் பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணைசெய்து அதன் வெளிப்படுத்தல்களை அறிக்கையிடுவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்க பொலிஸ் விசாரணைக் குழுவொன்றைப் பரிந்துரைக்குமாறு, விசாரணைக் குழு விடுத்த கோரிக்கைக்கமைய பதில் பொலிஸ் மா அதிபர் குறித்த விசாரணைக் குழுவை நியமித்துள்ளார்.

இந்த விசாரணைக் குழு நேற்றுமுன்தினம் (28) பாராளுமன்றத்தில் மூன்றாவது தடவையாகவும் கூடியபோது நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் விசாரணைக் குழுவின் ஒத்துழைப்புடன் எதிர்கால விசாரணைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், இன்று (30) மீண்டும் கூடுவதற்கு இந்த விசாரணைக் குழு தீர்மானித்தது.

# ‘தமிழன்’ பத்திரிகை – அம்ரிதா ஊதுபத்திகள் அனுசரணையில் திருப்பதிக்கான புனித யாத்திரை

## சென்னையிலிருந்து திருப்பதி பயணமான பக்தர்கள்







‘தமிழன்’ பத்திரிகை மற்றும் அம்ரிதா ஊதுபத்திகள் அனுசரணையில் திருப்பதிக்கான புனித யாத்திரைப் பயணத்தில் 10 பக்தர்கள் திருப்பதிக்கு பயணமானார்கள்.

‘தமிழன்’ பத்திரிகை மற்றும் அம்ரிதா ஊதுபத்திகள் இணைந்து நடத்திய திருப்பதி புனித யாத்திரைக்கு சீட்டிழுப்பு முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 அதிர்ஷ்டசாலிகள் நேற்று முன்தினம் இலங்கையிலிருந்து இந்தியாவை சென்றடைந்தனர்.

இந்தப் புனித யாத்திரை பயணத்தின் முதலாவது நாளான நேற்று முன்தினம் (28) சென்னையிலிருந்து திருப்பதிக்கு புறப்பட்டுள்ளனர்.

# 2025க்கான திட்டங்களின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட அளவில் இல்லை

## வரவு – செலவுத்திட்ட மீளாய்வுக் கூட்டத்தில் ஆளுநர் வேதநாயகன்

**(பு.கஜிந்தன்)**



2025ஆம் ஆண்டுக்கான திட்டங்களின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்டளவில் இல்லை எனச் சுட்டிக்காட்டிய வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஒதுக்கப்பட்ட நிதியை ஒதுக்கிய திட்டங்களுக்கு உரிய காலப்பகுதிக்குள் செலவு செய்து முடிக்கவேண்டியது பொறுப்பு எனக் குறிப்பிட்டார்.

திட்டங்களை உரிய காலத்தில் நடைமுறைப் படுத்தி முடிக்காமல் அதற்கு சாட்டுப்போக்குச் சொல்லவேண்டாம் எனவும் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் 2025ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்ட மீளாய்வுக் கூட்டம் நேற்று (29) ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

நடப்பாண்டின் மூன்றிலொரு காலம் நிறைவடைந்துள்ள நிலையில், திட்டங்களின் முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்டளவில் இல்லாமல் உள்ளது. எமது மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாகச் செலவு செய்வதுடன், அடுத்த ஆண்டு அதிகளவு நிதியைக் கோரவேண்டும். அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களது தலைமைத்துவத்தில்தான் இந்தத் திட்டங்களின் நடைமுறையாக்கத்தின் வெற்றி தங்கியிருக்கின்றது.

கடந்த மீளாய்வுக் கூட்டத்தில் தெரிவித்ததைப் போல திட்டங்களின் நடைமுறையாக்கங்களை செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் நேரடியாகச் சென்று பார்வையிடுவதுடன், இரு வாரங்களுக்கு ஒரு தடவை மீளாய்வுக் கூட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும்.

திட்டங்களுக்கான ஒப்பந்தகாரர்களைத் தெரிவுசெய்யும்போது அவதானம் தேவை. குறைந்த விலையில் கேள்வி கூறலைச் சமர்ப்பித்து ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் அதை நடைமுறைப் படுத்தாமல் விட்டுவிடுவார்கள். தவறிழைக்கும் ஒப்பந்தக்காரர்களை கறுப்புப் பட்டியலில் உள்வாங்கவேண்டுமென்பதை பல தடவைகள் சொல்லியுள்ளேன். அதை நடைமுறைப்படுத்தவேண்டியது பிரதி பிரதம செயலாளர் - பொறியியல் சேவைகளின் பொறுப்பு. அதைச் செய்வதனூடாகவே எதிர்காலத்திலாவது பிரச்சினைகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள முடியும்.

இதன் பின்னர் வடக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் - நிதி எஸ்.குகதாசன், நிதி முன்னேற்றம் தொடர்பில் ஒவ்வொரு அமைச்சுகள், திணைக்களங்கள் ரீதியாக தெரியப்படுத்தினார். கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு கோரிய அவர், கட்டுநிதி விடுவிப்புத் தொடர்பில் தாமதங்கள் ஏதுமில்லை எனக் குறிப்பிட்டார். அதேபோல மாகாணத்துக்கு எதிர்பார்க்கப்பட்ட வரி வருவாய் உரியவாறு காலாண்டுக்குரியது கிடைக்கப்பெற்றுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள நிலையான வைப்பு நிதியை அந்தப் பிரதேசங்களின் சிறிய அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்திய ஆளுநர், வருமானம் குறைந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாகாணத்தின் நிதியை வழங்குவது தொடர்பில் பரிசீலிக்கலாம் என்றும் குறிப்பிட்டார். நிரல் அமைச்சுகள் திட்ட முன்மொழிவுகளை முன்வைத்தால் நிதியை விடுவிக்கத் தயாராகவுள்ள நிலையில், தேவையான திட்டங்களைச் சமர்ப்பித்து நிதியைப்பெற்று நடைமுறைப்படுத்த வேண்டும்.



இதன் பின்னர் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் வடக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் - திட்டமிடல் எம்.கிருபாசுதன் ஒவ்வொரு அமைச்சுகள், திணைக்களங்கள் ரீதியாகத் தெளிவுபடுத்தினார்.

2025ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண சபையின் நிதிக்கூற்று அறிக்கை புத்தகம் இந்தக் கூட்டத்தில் வைத்து வடக்கு மாகாண ஆளுநரிடம், வடக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் - நிதி அவர்களால் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை, இந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில், வடக்கு மாகாணத்தில் தற்போது முருங்கை மற்றும் மாம்பழச் செய்கையில் ஏற்பட்டுள்ள நோய்த் தாக்கம் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

அது தொடர்பில் ஆராய்ச்சிகளை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுத்த ஆளுநர், புதிய இனங்களை அறிமுகப் படுத்தும்போது பாரம்பரிய இனங்களை அழிவடையாமலும் பார்த்துக்கொள்வது விவசாயத் திணைக்களத்தின் பொறுப்பு எனக் குறிப்பிட்டார்.

# பொறியியல் தொழில்நுட்பத்தில் முதல்நிலைபெற்ற மாணவனை வாழ்த்தினார் ரவிகரன் எம்.பி.

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் பொறியியல் தொழில்நுட்பவியலில் முதலிடம்பெற்ற ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மாணவனான பரமேஸ்வரன் வாணுசனை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று (29) நேரில் சென்று வாழ்த்தியுள்ளார்.



அந்தவகையில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்துக்கு நேரடியாகச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் முதல்நிலைபெற்ற மாணவனைப் பாராட்டி வாழ்த்தியதுடன், அதிபர், ஆசிரியர்களுக்கும் தனது பாராட்டுகளைத் தெரிவித்திருந்தார்.

மேலும் இதன்போது வெளிமாவட்டத்திலிருந்து வருகைதந்து தங்கியிருந்து, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விடுதிகள் சீரின்மை தொடர்பில் பாடசாலை அதிபரால் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில், குறித்த பிரச்சினை தொடர்பில் தமக்கு கோரிக்கை கடிதமொன்றை வழங்குமாறும் தாம் குறித்த பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.







நீர்கொழும்பு, பலகத்துறை அல்ஹிமா மகளிர் நலன்புரி அமைப்பும் அல்பலாஹ் அஹதிய்யா பாடசாலையும் இணைந்து நடத்திய புனித ரமழான் விருது வழங்கல் நிகழ்வு பலகத்துறை Maple Leaf Hotel வரவேற்பு மண்டபத்தில் அஹதிய்யாவின் தலைவர் நஸ்ரியா நஸ்மி தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (27) மாலை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஹாஷிம் உமர் பௌண்டேசன் ஸ்தாபகர் புரவலர் ஹாஷிம் உமர், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோருக்குப் பரிசு, விருது வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்வில் முன்னாள் மேலதிக தேர்தல் ஆணையாளர் எம்.முஹம்மத் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.









***ஸ்ரீ சத்யசாயி பகவானின் மகா சமாதி தின ஆராதனா மகோற்சவம் கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி மத்திய நிலையத்தில், பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. 23ஆம் திகதி மாலை சிவஸ்ரீ எஸ்.ஜெகநாத குருக்கள் ருத்ர யாகபூஜையை மேற்கொண்டிருந்தார். பாபாவுக்கு அபிஷேகம் மற்றும் மங்கள ஆராத்தியும் இடம்பெற்றன.***

# அட்சய திருதியையும் வழிபாடுகளும்



★ வாழ்க்கைக்கு அத்தியாவசியமான செல்வத்தைப் பெற, மகாலட்சுமி வழிபாட்டை நம் முன்னோர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதேநேரம், மகாலட்சுமியை வழிபடுவதற்கும் சிறப்பான நாளாக, சித்திரை மாதம் அமாவாசைக்குப் பிறகு வரும் வளர்பிறை திருதியை திதியை தெரிவுசெய்து வைத்துள்ளனர். இந்தத் திருதியை 'அட்சய திருதியை' என்று அழைக்கப்படுகிறது.

★ திதிகளில் சிறப்புமிக்கதான பௌர்ணமி, அமாவாசை, சதுர்த்தி, ஏகாதசி போன்று சித்திரை மாத வளர்பிறையில் வரும் திருதியையும் இணைந்திருக்கிறது. வாழ்வுக்குத் தேவையான செல்வத்தை வழங்கும் சிறப்புமிக்க நாள் இதுவாகும்.

★ யுகங்களில் முதல் யுகமான கிருதயுகம் தோன்றியது இந்நாளில்தான் என்றும் பிரம்மன் பூமியைத் தோற்றுவித்ததும் பரசுராமர் அவதாரம் நிகழ்ந்ததும் பகீரதன் கடும் தவம் செய்து ஆகாயத்திலிருந்து கங்கையை பூமிக்கு கொண்டு வந்ததும் முதல் தெய்வமான ஈஸ்வரனுக்கு அன்னை பார்வதி தேவி தன் கையிலிருக்கும் அட்சயப் பாத்திரத்திலிருந்து உணவளித்ததும் இந்த நாளில் தான் என்று புராணங்கள் தெரிவிக்கின்றன.

★ 'சயம்' என்றால் 'தேய்தல்' அல்லது 'குறைதல்' என்பது பொருள். 'அட்சயம்' என்றால் 'குறைவில்லாதது அள்ள அள்ளக் குறையாதது' என்று அர்த்தம். பஞ்ச பாண்டவர்களுக்கு சூரியனால் வழங்கப்பட்ட அட்சயப் பாத்திரத்தில் எடுக்க எடுக்க குறையாத உணவு கிடைப்பது போன்று, அட்சயதிருதியை நன்னாளில் மகாலட்சுமியை வணங்கினால் குறையாத செல்வங்களைப் பெறலாம் என்பது ஐதீகம்.

★ அட்சய திருதியை நாளில்தான் திருப்பதி வெங்கடாசலபதி தன் திருமணத்துக்காக குபேரனிடம் கடன் பெற்றதாகவும் குபேரனும் இதே நன்னாளில் மகாலட்சுமியை மனதார வேண்டி தனது செல்வத்தை என்றும் குறையாமல் பெருக்கிக் கொள்வதாகவும் ஐதீகம். எனவே, அட்சய திருதியை நாளில் குபேர லட்சுமி பூஜை செய்வது சிறப்புக்குரியது. அத்தோடு பொன், பொருள் வாங்குவது, அலுவலக கணக்குகள், தொழில் சார்ந்த புத்தகங்களை பூஜையில் வைத்து வழிபடுவதும் சிறப்பு.


★ சாதாரண உப்பிலும் அரிசி போன்ற தானியங்களிலும் மஞ்சள் போன்ற மங்கலப் பொருட்களிலும் மகாலட்சுமி வாசம் செய்கிறாள். எனவே, அட்சய திருதியை தினத்தில் உப்பு, தானியம் அல்லது மஞ்சளை வாங்கி வீட்டில் வைக்கலாம். நல்ல எண்ணங்களோடு நல்ல செயல்களும் உள்ள இடத்தில் மகாலட்சுமியின் அருள் நிச்சயம் இருக்கும்.

★ அட்சய திருதியை அன்று செய்யப்படும் சத்ய நாராயண பூஜை, அனைத்து செல்வங்களையும் தங்குதடையின்றி அருளும். பூஜை அறையில் கோலமிட்டு அதன்மேல் ஒரு மனைப் பலகையில் முனைமுறியாத நுனி வாழையிலை போட வேண்டும். அந்த இலையின் நடுவில் பச்சரிசியைப் பரப்பி, அதன்மேல் ஒரு செம்பில் தூயநீரை நிரப்பி, மாவிலை மற்றும் மஞ்சள் தடவிய தேங்காய் வைத்து, அம்பிகை குடிகொள்ளும் கலசமாக மாற்ற வேண்டும். கலசத்தை பூக்களால் அலங்கரிக்க வேண்டும். இலையின் வலப்புறம் மஞ்சளால் பிடித்த பிள்ளையாரை வைக்கவேண்டும். கலசத்தின் அருகே நெல் நிறைத்து வைத்து ஐந்துமுக குத்துவிளக்கேற்றி லட்சுமி நாராயணர் படம் வைத்து, நைவேத்தியம் படைத்து, தீப- தூபம் காட்டி வழிபாடு செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் லட்சுமியின் அருள் முழுமையாகக் கிடைக்குமென்பது ஐதீகம்.

★ அட்சய திருதியை நாளில், மகாலட்சுமியை மனதார வணங்கி, ஆதரவற்ற ஏழைகளுக்கு தேவைப்படும் பொருட்களை வாங்கிக் கொடுத்து அவர்களை மகிழ்விக்கலாம். தானங்களில் சிறந்த அன்னதானம், வஸ்திர (உடை) தானம் போன்றவற்றைச் செய்வதோடு, கல்வி பயில வசதியின்றித் தவிக்கும் பிள்ளைகளுக்கு உதவுவதும் உங்களுக்கு புண்ணியத்தைப் பெற்றுத்தரும். அதோடு, இந்த நாளில் புதிய செயல்களைத் தொடங்குவது, வீடு, நிலம் போன்ற விலை மதிப்பற்ற பொருட்களை வாங்குவது, மரக்கன்றுகள் நடுவது, முதியோர் இல்லங்களுக்கு உதவுவது, இயலாதவர்களுக்கு சேவை செய்வது போன்றவற்றை மனமுவந்து செய்தால் நம் வாழ்வில் வளங்கள் பெருகும்.

★ 'அட்சயம்' என்றால் அளவில்லாதது என்பதால், அட்சய திருதியை நாளில் மட்டுமல்லாது, மற்றைய தினங்களிலும் கூட அளவற்ற அன்புடனும் முயற்சியுடனும் நாம் காரியங்களைச் செய்து வந்தால், அளவில்லாத வெற்றியும் அனைத்து செல்வங்களும் அன்னையின் அருளால் நம்மைத் தேடிவரும்.

# அட்சய திருதியை வரலாறு





அட்சய திருதியை உலகம் முழுவதுமுள்ள இந்துக்களால் கொண்டாடப்படும் மிகவும் புனிதமான நாட்களில் ஒன்றாகும். இந்த நாளில் தொடங்கும் எதுவும் எப்போதும் வெற்றிபெறும் என்பது நம்பிக்கை. இந்த நாள் நல்ல அதிர்ஷ்டம், வெற்றி மற்றும் அதிர்ஷ்ட ஆதாயங்களின் அடையாளமாகும்.

**அட்சய திருதியை எப்போது கொண்டாடப்படுகிறது?**

தமிழ் மாதமான சித்திரை மாதத்தின் சுக்ல பக்ஷத்தின் மூன்றாவது நாளில் அட்சய திருதியை கொண்டாடப்படுகிறது. கிரிகோரியன் நாட்காட்டியின்படி, இது ஏப்ரல்-மே மாதங்களில் வருகிறது. இந்த நாளில்தான் சூரியன் மற்றும் சந்திரன் இருவரும் தங்கள் கிரகங்களில் சிறப்பாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

**அட்சய திருதியை வரலாறு**

புராணங்கள் மற்றும் பண்டைய வரலாற்றின் படி, இந்த நாள் பல முக்கியமான சம்பவங்களைக் குறிக்கிறது.

★ விநாயகப் பெருமானும் வேத வியாசரும் இதிகாசமான மகாபாரதத்தை இந்த நாளில்தான் எழுதினார்கள்.

★ இந்த நாள் விஷ்ணுவின் ஆறாவது அவதாரமான பரசுராமரின் பிறந்தநாளாகவும் கொண்டாடப்படுகிறது.

★ இந்த நாளில் அன்னபூரணி தேவி பிறந்தாள்.

★ இந்த நாளில், கிருஷ்ணர் தனது உதவிக்காக வந்த தனது ஏழை நண்பரான சுதாமாவுக்கு செல்வத்தையும் பண ஆதாயங்களையும் வழங்கினார்.

★ மகாபாரதத்தின்படி, இந்த நாளில் கிருஷ்ணர் பாண்டவர்கள் வன வாசத்தில் இருந்தபோது அவர்களுக்கு அக்ஷய பாத்திரத்தை வழங்கினார். அவர்களை ஒருபோதும் பசியடையச் செய்யாத வரம்பற்ற அளவிலான உணவைத் தொடர்ந்து உற்பத்தி செய்யும் இந்தக் கிண்ணத்தை அவர்களுக்கு அருளினார்.

★ இந்த நாளில் கங்கை நதி வானத்திலிருந்து பூமியில் இறங்கியது.

★ இந்த நாளில்தான் குபேரர் லட்சுமி தேவியை வழிபட்டார். இதனால் கடவுளின் பொருளாளர் பதவி வழங்கப்பட்டது.

★ சமண மதத்தில் இந்த நாள் அவர்களின் முதல் கடவுளான ஆதிநாதரை நினைவுகூரும் வகையில் கொண்டாடப்படுகிறது.

**அட்சய திருதியையின் போது சடங்குகள்**

விஷ்ணு பக்தர்கள் இந்நாளில் விரதமிருந்து கடவுளை வழிபடுகின்றனர். பின்னர், ஏழைகளுக்கு அரிசி, உப்பு, நெய், காய்கறிகள், பழங்கள், ஆடைகள் வழங்கி தொண்டு செய்யப்படுகிறது. விஷ்ணுவின் அடையாளமாக துளசி நீர் சுற்றிலும் தெளிக்கப்படுகிறது.

கிழக்கு இந்தியாவில், இந்த நாள் வரவிருக்கும் அறுவடை காலத்துக்கான முதல் உழவு நாளாகத் தொடங்குகிறது. மேலும், தொழிலதிபர்களுக்கு அடுத்த நிதியாண்டுக்கான புதிய தணிக்கைப் புத்தகத்தைத் தொடங்கும் முன் விநாயகப் பெருமானையும் லட்சுமி தேவியையும் வழிபடுகின்றனர். இது ஹல்கத்தா என்று அழைக்கப்படுகிறது.

இந்நாளில் ஏராளமானோர் தங்கம் மற்றும் தங்க நகைகளை வாங்குகின்றனர். தங்கம் அதிர்ஷ்டம் மற்றும் செல்வத்தின் அடையாளமாக இருப்பதால் இந்த நாளில் இதை வாங்குவது புனிதமாகக் கருதப்படுகிறது.

இந்த நாளில் புதிய தொழில் முயற்சிகள், கட்டுமானப் பணிகள் தொடங்கும்.

மற்றைய சடங்குகளில் கங்கையில் புனித நீராடுதல், புனித நெருப்பில் பார்லியை சமர்ப்பித்தல் மற்றும் இந்த நாளில் நன்கொடைகள் மற்றும் பிரசாதம் வழங்குதல் ஆகியவை அடங்கும்.

ஜைனர்கள் தங்களின் ஒரு வருட தபஸை இந்நாளில் முடித்து, கரும்புச்சாறு அருந்தி வழிபாட்டை முடிக்கின்றனர்.

ஆன்மீக நடவடிக்கைகள், தியானம் மற்றும் புனித மந்திரங்களை உச்சரிப்பது எதிர்காலத்தில் நல்ல அதிர்ஷ்டத்தை உறுதிப்படுத்த முக்கியமாகக் கருதப்படுகிறது.

பகவான் கிருஷ்ணரின் பக்தர்கள் இந்த நாளில் சந்தனத்தால் கடவுளுக்கு அபிஷேகம் செய்கிறார்கள். அவ்வாறு செய்தால், அந்த நபர் இறந்த பிறகு சொர்க்கத்தை அடைவார் என்று நம்பப்படுகிறது.
















# ஆரையம்பதி விபத்தில் குடும்பஸ்தர் பலி

(மண்டூர் செய்தியாளர்)

ஆரையம்பதி பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தரொருவர் கடந்த ஞாயிறன்று பலியானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபுலானந்தா வீதி, கல்லடி, உப்போடை பிரதேசத்தைச் சேந்த 03 பிள்ளைகளின் தந்தையான 59 வயதுடைய சின்னத்தம்பி தவராஜா என்பவரே இவ்விபத்தில் பலியானவராவார்.

கடந்த இரு நாட்களுக்கு முன்னர் தனது வீட்டிலிருந்து ஆரையம்பதி பிரதேசத்திலுள்ள தனது சகோதரியின் வீட்டுக்கு துவிச்சக்கர வண்டியில் பயணித்து பாதையை கடக்க முற்பட்டபோது அதே வீதியினூடாக பயணித்த மோட்டார் சைக்கிள் விபத்தை ஏற்படுத்திய நிலையில், குறித்த நபர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதவான் அண்ணாத்துரை தர்சினியின் உத்தரவுக்கமைவாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளின் பின்னர் சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்குட்படுத்துமாறு சட்ட வைத்திய அதிகாரிக்குப் பணித்தார். சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அக்கரைப்பற்று மாநகர வர்த்தகர்களுக்கு விழிப்புணர்வு

(சாய்ந்தமருது செய்தியாளர்)



அக்கரைப்பற்று மாநகர சபையால் வர்த்தகர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விசேட விழிப்புணர்வு கருத்தரங்கு அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் என்.எம்.நௌபீஸ் தலைமையில் திங்கட்கிழமை (28) ஹல்லாஜ் மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் எம்.அன்சார், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.சலீம், நுகர்வோர் அதிகாரசபையின் புலனாய்வு உத்தியோகத்தர்களான இஸட்.எம்.சாஜித், எம்.எச்.எம்.றிபாஜ் மற்றும் அக்கரைப்பற்று வர்த்தகர் சங்கத்தின் நிர்வாகிகள் உட்பட வர்த்தகர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது அக்கரைப்பற்று மாநகர சபை எல்லைக்குட்பட்ட அனைத்து வர்த்தக நிலையங்களும் வியாபார அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்திய ஆணையாளர், வர்த்தகர்களுக்கு இதனை இலகுபடுத்தும் பொருட்டு அடுத்த வாரமளவில் தமது மாநகர சபையால் நடமாடும் சேவை ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அதன்போது ஆதன வரி உள்ளிட்ட சேவைக் கட்டணங்களுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து, வியாபார அனுமதிப் பத்திரங்களை இலகுவாகவும் துரிதமாகவும் பெற்றுக்கொள்ள முடியுமென்று தெளிவுபடுத்தினார்.

மேலும், திண்மக்கழிவகற்றல் சேவையை வினைத்திறனுடன் இன்னும் சிறப்பாக முன்னெடுப்பதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இதற்கு வர்த்தகர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க முன்வர வேண்டும் எனவும் ஆணையாளர் வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் நுகர்வோர் அதிகார சபையின் புலனாய்வு உத்தி யோகத்தர் இஸட்.எம். சாஜித், வர்த்தகர்களுக்கான விழிப்புணர்வு விரிவுரையொன்றை நிகழ்த்தினார்.

இதன்போது பொருட்களின் விலைகளைக் காட்சிப்படுத்தல், அவற்றின் உற்பத்தி, தரம் மற்றும் காலாவதி உள்ளிட்ட விடயங்களில் நுகர்வோர் அதிகாரசபையின் சட்டங்கள், ஒழுங்கு விதிகள் தொடர்பாக தெளிவுபடுத்தி, அறிவுறுத்தல்களை வழங்கிய அவர், தமது வியாபார நடவடிக்கைகளின்போது வர்த்தகர்கள் இவற்றைக் கண்டிப்பாக பின்பற்ற வேண்டுமென்று வலியுறுத்தியதுடன் தவறும் வர்த்தகர்கள் மீது எவ்வித தயவுமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.சலீம், உணவு விடயங்களில் வர்த்தகர்கள் பேண வேண்டிய நடைமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்ததுடன், இந்த நடைமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறும் வர்த்தகர்களுக்கு எதிராக உணவுப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவுறுத்தினார்.

# கல்முனை அஷ்ரப் வைத்தியசாலையில் ஆண் தாதிகளுக்குப் பெரும் தட்டுப்பாடு

## நோயாளர்கள் சிரமப்படுவதாகவும் விசனம்

(நற்பிட்டிமுனை செய்தியாளர்)

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் ஆண் தாதிகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக, சனிக்கிழமையில் பல்வேறு நோய்களுக்கு ஊசி போட வருவோர்களே இதனால் பாதிக்கப்படுகின்றனர்.

சிலவேளைகளில் கடமையிலிருக்கும் டாக்டர்களே ஊசியைப் போட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். பெண் தாதிகள் இருப்பதால் பெண்களுக்கு இப்பிரச்சினை இல்லை. பல்வேறு வைத்திய சேவையை வழங்கும் இந்த வைத்தியசாலைக்கு மூவின மக்களும் வருகை தருகின்றனர்.

பெரும்பாலும் அம்பாறை மாவட்ட வைத்தியசாலைகளில் அதிகளவு எலும்பு முறிவு சத்திரசிகிச்சைக்குரிய ஆளணி வெற்றிடம் காணப்படுகிறது.

இந்நிலையில் ஆண்தாதிகளை நியமிக்க உரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டோர் மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பொய்யான பிரசாரங்களுக்கு வாக்களிப்பவர்களாக மாளிகைக்காடு மக்கள் இல்லை

## வேட்பாளர் ஜாஹீர்



(மாளிகைக்காடு செய்தியாளர்)

''மே 06ஆம் திகதி மாலை எங்களின் வெற்றிச்செய்தியை மக்கள் அறிவிப்பார்களென்ற நம்பிக்கை எங்களுக்குத் தெளிவாக இருக்கிறது. ஏமாற்றுக் கதைகளை நம்பி பொய்யான பிரசாரங்களுக்கு வாக்களிக்கும் மக்களாக மாளிகைக்காடு மக்கள் இல்லை என்பதை பல தடவைகளில் மக்கள் நிரூபித்துள்ளார்கள். இனியும் மக்கள் உண்மையின் பக்கமாக நின்று அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் சக்திகொண்ட எங்களுடனே பயணிப்பார்கள்'' - என காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளரும் சுயேச்சைக் குழு தலைமை வேட்பாளருமான ஏ.எம்.ஜாஹீர் தெரிவித்தார்.

பிரதேச சமூக சேவகர்கள் ஒன்றிணைந்து காரைதீவு பிரதேச சபையில் தையல் இயந்திரம் சின்னத்தில் சுயேச்சையாக போட்டியிடுகிறார்கள். அவர்களின் தேர்தல் செயற்பாட்டுக் காரியாலயம் மாளிகா வீதியில் திறந்து வைக்கப் பட்டது. மாளிகைக்காடு மேற்கு வேட்பாளர் எஸ்.பஸ்லூன், பட்டியல் வேட்பாளர்கள் சகிதம் காரியாலயத்தை திறந்து வைத்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிட்ட அவர்,

''இனவாதிகளின் கோரமுகங்கள் வெளிப்பட்டபோது அவர்களின் சலுகைகளுக்காக சோரம் போனவர்கள் மத்தியில் மக்கள் தந்த அமானிதத்தைப் பொறுப்புடன் காத்து நிறைவான அபிவிருத்திகள் செய்த முஸ்லிம் சமூகத்தின் குரலாக இருந்த எங்களின் சமூகப்பணி மக்கள் மத்தியில் எப்போதும் நன்றியுடன் நினைவுகொள்ளப்படுகிறது என்பதனாலேயே மக்கள் எப்போதும் எங்களுடன் இணைந்து பயணிக்கிறார்கள்.

திண்மக்கழிவகற்றி, தெருவிளக்குகளைப் பராமரித்து, வடிகான்களை சீரமைத்து பிரதேச சபைக்குரிய கடமைகளைச் செய்பவர்களாக மட்டும் இல்லாமல் கடந்த காலங்களில் நிறைய அரசியல் தலைவர்களின் உதவியைக் கொண்டுவந்து பிரதேச, இனவாத சிந்தனைகள் இல்லாமல் சகல பிரதேசங்களுக்கும் சேவையாற்றியுள்ளோம்.

பல ஏழைகளின் வாழ்வாதார மேம்பாட்டுக்கும் நாங்கள் பக்கபலமாக இருந்துள்ளோம். இவற்றையெல்லாம் மக்கள் நன்றாக அறிந்து வைத்துள்ளார்கள். பழகிப் பார்த்து அரசியல் செய்யும் நேரத்தில் நாங்கள் இல்லை. மக்கள் தெளிவாக இருக்கிறார்கள்.

மாளிகைக்காட்டின் அரசியல் தலைமைத்துவங்கள் எங்கள் அணியிலேயே இருக்கின்றன. படித்த மக்கள் முதல் பாமரமக்கள் வரை ஜனநாயக அரசியல் செய்பவர்கள் நாங்கள் என்பதை விளங்கி தபால் மூல வாக்கிலும் நிறைய வாக்குகளை எங்களுக்கு வழங்கியுள்ளதாக அறிகிறோம்'' என்றார்.



உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக பாலமுனை பிரதேசத்தில் போட்டியிடும் ஏ.எல்.எம்.அலியாரை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமும் காரியாலய திறப்பு நிகழ்வும் அண்மையில் (27) இடம்பெற்றது. தேர்தல் குழுத் தலைவர் நபீல் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு தேர்தல் காரியாலயத்தை திறந்து வைத்தார்.

(கோணாவத்தை செய்தியாளர்)



கிண்ணியா நகர சபை அண்ணல் நகர் வட்டாரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிடும் கலிபத்துல்லாவின் தேர்தல் காரியாலய திறப்பு நிகழ்வும் மக்கள் சந்திப்பும் அண்ணல் நகரில் அண்மையில் (26) இடம்பெற்றது. இதன்போது திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் மற்றும் ஆதரவாளர்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

(தம்பலகாமம் செய்தியாளர்)

# திருமலையில் 06க்கும் மேற்பட்ட சபைகளை கைப்பற்றி அரசுக்கு தக்கபாடம் புகட்டுவோம்

## ஹக்கீம் எம்.பி.

(கிண்ணியா செய்தியாளர்)



''ஒப்பீட்டு விகிதாசார அடிப்படையில் ஆகக்கூடிய முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரே மாவட்டம் திருகோணமலை மாவட்டமாகும். இதனை நிரூபித்து காட்டுவது மட்டுமல்லாமல் முஸ்லிம்களும் இந்நாட்டின் கௌரவிக்கப்படவேண்டிய ஒரு தேசிய இனம் என்பதையும் இம்மாவட்டத்தில் இம்முறை 06க்கும் மேற்பட்ட உள்ளூராட்சி சபைகளின் ஆட்சியைக் கைப்பற்றி இவ்வரசுக்கு தக்க பாடம் புகட்டுவோம் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு ரவூப் ஹக்கீம் எம்.பி. கிழக்கு மாகாணத்துக்கு மேற்கொண்டிருந்த தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் ஓர் அங்கமாக அண்மையில்(26) மூதூர் கலாசார மண்டபத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த வேட்பாளர் மற்றும் மக்கள் சந்திப்புகளில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

''முஸ்லிம் இளைஞன் ஒருவரை ஸ்ரிக்கர் ஒட்டியதற்காக கைது செய்வதற்காக கையொப்பம் இட்ட ஜனாதிபதி கடந்த காலத்தில் பயங்கரவாத சட்டத்தை சட்டத்திலிருந்து நீக்க வேண்டும் எனக் கூறியவர் தற்போது இதற்குப் பதிலான சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் எனக் கூறுகின்றார்.

அது மட்டுமன்றி, இவர்கள் எத்தனை ஸ்ரிக்கர்களை ஒட்டியிருப்பார்கள். அம்பாறையில் தேசிய பட்டியலிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனுக்கும் வித்தியாசம் தெரியாமல் பேசிக் கொண்டிருக்கின்றார். மூதூர் முதன்மையானதாக வரலாற்று ரீதியான வெற்றியை மீண்டும் உறுதி செய்யும் என்ற நற்செய்தியை கேட்டு மிகவும் சந்தோஷமடைவதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், கட்சியின் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.எம்.லாஹிர் உட்பட வேட்பாளர்களான உமர் ஜவாத், பி.ரி.எம்.பைசர், அப்துல் ஜாயா அனஸ், எச்.எம்.ஏ.மனாப், என்.எம்.எம்.றம்சாத் ஆகியோரும் உரையாற்றினர்.

# டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுப்பு

(பாறுக் ஷிஹான்)



கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின்கீழ் அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அடைமழைக்குப் பின்னர் தொடர்ச்சியாக டெங்கு களத்தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

டெங்கு நுளம்பு பரவக்கூடிய அபாயம் காணப்படுவதில் இப்பிரதேசத்தில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அண்மையில் டெங்கு நோயாளியாக இனங்காணப்பட்டவரின் வீட்டின் சுற்றுச்சூழலை அவதானித்ததன் பின்னர் அப்பகுதியில் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய அபாயம் காணப்பட்டமையால் அப்பகுதிகளிலுள்ள பல வீடுகள் பரிசோதனை செய்யப்பட்டன.

அத்துடன், வீடுகள் மற்றும் சூழல்களை டெங்கு நுளம்புகள் பரவக்கூடியதாக வைத்திருந்த சிலருக்கு எதிராக வழக்குத் தாக்கல் மேற்கொள்ளப்பட்டதுடன், எச்சரிக்கையுடனான ஆலோசனையும் வழங்கப்பட்டது.

மேலும், மேற்குறித்த டெங்கு தடுப்பு களப்பணியானது கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸஹீலா இஸ்ஸதீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே.மதன் தலைமையில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு களத்தடுப்புப் பணியாளர்கள் அடங்கலான குழுவினர்கள் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

மேலும், குறுகிய காலத்திலும் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் அழிக்கப்படுவதுடன் மலசலகூடங்களும் சீரமைக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப் பட்டது.

டெங்கு நோயிலிருந்து பாதுகாப்பதற்கான வீட்டின் உட்புறத்தையும் சுற்றுப்புற சூழலையும் தொடர்ச்சியாக அவதானித்து டெங்கு நுளம்புகள் பரவுகின்ற இடங்களைச் சுத்தமாக வைத்திருப்போம் எனும் துண்டுப்பிரசுரம் வழங்கப்பட்டு விழிப்புணர்வு நடவடிக்கைகள் பொதுமக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போது மழை பெய்து வருவதால் இதற்கமைய டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களைக் கண்டறிந்து தடுப்பதற்கான டெங்கு கள தடுப்பு பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டன.

# கரடியனாறில் 06 ஆயிரம் ரூபா இலஞ்சம் வாங்கிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டு. கரடியனாறு பகுதியில் கடையொன்றுக்கு ஆவணமொன்றை வழங்க 06 ஆயிரம் ரூபா இலஞ்சமாக வாங்கிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவரை நேற்று செவ்வாய்க்கிழமை (29) மாறுவேடத்திலிருந்த இலஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவினர் கைதுசெய்துள்ளதாக இலஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் உணவுக் கடையொன்றை அமைப்பதற்காக கரடியனாறு சுகாதாரப் பிரிவில் கடமையாற்றிவரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவரிடம் கோரிய போது அவர் இலஞ்சமாக 06 ஆயிரம் ரூபாவை கோரியுள்ளார்.

இதனையடுத்து குறித்த கடை உரிமையாளர் கொழும்பிலுள்ள இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்ததையடுத்து அவர்களின் வழிகாட்டலில் சம்பவதினம் நண்பகல் 12 மணியளவில் கரடியனாறு பகுதியில் வீதியில் இலஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவினர் மாறுவேடத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கடை உரிமையாளரிடம் இலஞ்சமாக 06 ஆயிரம் ரூபாவை வாங்கிய நிலையில், அங்கு மாறு வேடத்தில் காத்திருந்த இலஞ்ச ஒழிப்புப் பிரிவினர் கைது செய்தனர்.

இதன்போது கைதுசெய்யப்பட்டவர் 54 வயதுடையவர் எனவும் இவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துவருவதாகவும் இலஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.



தேசிய காங்கிரஸின் மட்டக்களப்பு – ஏறாவூர் அமைப்பாளராக வர்த்தகப் பிரமுகர் காதர் முகைதீன் நிசாத் நியமிக்கப்பட்டதற்கான உத்தியோகபூர்வ கடிதத்தை கட்சியின் தலைவர் முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாஉல்லா கையளித்தார்.

(ஏறாவூர் செய்தியாளர்)







சம்மாந்துறை பிரதேச சபைக்கான தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரப் பணிகள் ஞாயிற்றுக்கிழமை (27) சம்மாந்துறையில் முன்னெடுக்கப்பட்டன. அந்த வகையில், சம்மாந்துறை, வளத்தாப்பிட்டி வட்டாரக் கூட்டம் வேட்பாளர் சாந்தகுமார் தலைமையிலும் மஜீட்புரம் வட்டார பொதுக்கூட்டம் பட்டியல் வேட்பாளர் இர்ஷாட் தலைமையிலும் மல்கம்பிட்டி வட்டார பெண்கள் சந்திப்பு வேட்பாளர் ஹினாயதுல்லாஹ் தலைமையிலும் மட்டக்களப்பு தரவை வட்டார பெண்கள் சந்திப்பு வேட்பாளர் சாஜித் தலைமையிலும் மத்தி வட்டார பொதுக்கூட்டம் வேட்பாளர் முபீஸ் தலைமையிலும் இடம்பெற்றன. இந்நிகழ்வுகளில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, காத்திரமான கருத்துகளை முன்வைத்தார். இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை பிரதேச செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(பொலிவேரியன் செய்தியாளர்)

# சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸில் மாணவர் பாராளுமன்றத் தேர்தல்






(மாளிகைக்காடு செய்தியாளர்)

மாணவர்களிடையே ஜனநாயக மரபுகளை மதித்தல் மற்றும் தலைமைத்துவ ஆற்றல்களை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களைக் கொண்ட சமூக விஞ்ஞான பாடத்தின் இணைப்பாடவிதான செயற்பாடான மாணவர் பாராளுமன்றத்தை உருவாக்கும் பொருட்டு மாணவர் பாராளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான மாணவர் பாராளுமன்றத் தேர்தல் கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் எம்.சி.நஸ்லின் றிப்காவின் ஆலோசனை வழிகாட்டலில் மாணவர் பாராளு மன்றத்துக்குப் பொறுப்பான ஆசிரியர் அமீர் ஹுசைன் தலைமையில் மிக நேர்த்தியாக இடம்பெற்றது.

இச்செயற்பாட்டை பாடசாலையின் சமூக விஞ்ஞான பாட ஆசிரியர்கள் சிறப்பாகத் திட்ட மிட்டு நடத்தினர். இந்தத் தேர்தல் நடவடிக்கையை வலயத்தின் வலயப் பாராளுமன்ற இணைப்பாளர் ஆசிரிய ஆலோசகர் ஐ.எம்.மௌசூர், சமூக விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர்களான முஹம்மட் தையூப், ஜுலூல் மற்றும் ஆங்கில பாடத்துக்கான வலய இணைப்பாளர் எம்.ஆரிப் ஆகியோர் கண்காணிப்புச் செய்தனர்.

தேர்தல் நடிவடிக்கைச் செயற்பாடுகளுக்கு பிரதி அதிபர் ஐ.எம்.எவ்.மர்சுனா, உதவி அதிபர் அப்துல் கபூர் மற்றும் ஏனைய ஆசிரியர்களும் ஒத்துழைப்பு வழங்கி மாணவர் பாராளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தனர்.

# ‘சமூக மாற்றத்துக்காக இளைஞர்களை வலுப்படுத்துதல்’ தொனிப்பொருளில் ஆராய்ச்சிக் கருத்தரங்கு மட்டக்களப்பில்






(மட்டக்களப்பு செய்தியாளர்)

இன, மத, சமூக மக்களின் பன்முகத்தன்மை கொண்ட கிழக்கு மாகாணம் இலங்கையின் அழகு மற்றும் அதன் சிக்கலான தன்மை இரண்டையும் பிரதிபலிக்கிறதென இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான சுவிட்ஸர்லாந்து தூதரகத்தின் அரசியல் விவகார முதலாவது செயலாளர் ஜஸ்டின் பொய்லட் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள சுவிட்ஸர்லாந்து தூதரகத்தால் நிதி அனுசரணையில் ‘சமூக மாற்றத்துக்காக இளைஞர்களை வலுப்படுத்துதல்’ எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற முதலாவது ஆண்டு ஆராய்ச்சி கருத்தரங்கு மட்டக்களப்பில் திங்கட்கிழமை (28) இடம்பெற்றபோது அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

பக்ற் எனப்படும் சமூக மாற்றத்துக்கான நடவடிக்கைகளை எழிதாக்குதல் நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த ஆராய்ச்சிக் கருத்தரங்கில் பக்ற் நிறுவனத்தின் சமூக செயற்பாட்டாளர்களான பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இளையோரால் சமூக அறிவியல், மனிதநேயம், புவியியல், சுற்றுச்சூழல் அறிவியல், கல்வி உள்ளிட்ட விடயப்பரப்புகளில் சமூகத்தில் காணப்படும் பல்வேறு சவால் நிறைந்த விடயங்கள் ஆராயப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கூட்டிணைவு ஒத்துழைப்புடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், சர்வதேச உள்நாட்டு ஆய்வாளர்கள், துறைசார்ந்த கல்வியியலாளர்கள், செயற்பாட்டாளர்கள் உட்பட இன்னும் சமூக மட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், இங்கு முக்கியமானது என்னவென்றால், இன, மத சமூகங்களின் பன்முகத்தன்மை கொண்ட இந்தக் கிழக்கு மாகாணத்தில் இந்நிகழ்வு நடக்கிறது. கிழக்கு மாகாணம் இலங்கையின் அழகு, அதன் சிக்கலான தன்மை ஆகிய இரண்டையும் பிரதிபலிக்கிறது. அதன் சவால்களையும் அதன் நம்பிக்கைகளையும் புரிந்துகொள்பவர்களைப் போல ஆராய்ச்சி மற்றும் கொள்கைச் சிந்தனை இந்தப் பிராந்தியத்திலிருந்து வருவது சிறப்பம்சமாகும். இது அனைத்து ஆராய்ச்சியாளர்களுக்கும் ஒரு சக்திவாய்ந்த முதற்படியாகும். இந்த விடயத்துக்காக நீங்கள் நேரத்தையும் சக்தியையும் யோசனைகளையும் எடுத்துக்கொண்டதற்கு வாழ்த்துகள்.

இது உங்களுக்கு ஓர் ஆரம்பம் மட்டுமே என்றும் சாதகமான மற்றும் நிலையான மாற்றத்தில் மாற்றத்தை ஏற்படுத்த நீங்கள் தொடர்ந்து ஆராய்ச்சியைப் பயன்படுத்தப் போகிறீர்கள் என்றும் நான் நம்புகிறேன். உண்மையான, அடிப்படைச் சவால்கள் மற்றும் மக்களுக்கு மிகவும் முக்கியமான பிரச்சினைகள் பற்றிய புரிதலின் மூலம் மட்டுமே உண்மையில் முக்கியமான கொள்கைகளையும் சாதகமான மாற்றத்தையும் கொண்டு வர முடியும். ஏனெனில், நீங்கள் இங்கு செய்த பணிகள் இந்த இலக்கை நோக்கிச் செல்ல ஒரு சிறந்த படியாகும்.

மேலும் கிழக்கு மாகாணத்தின் பன்முகத்தன்மையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இளைஞர்கள் ஆண்களும் பெண்களும் பரிந்துரை மற்றும் உரையாடலுக்கான வலுவான ஆராய்ச்சி அடிப்படையிலான தளத்தை உருவாக்குவதே பக்ற் அமைப்பின் நோக்கமாக இருப்பதால், அந்நிறுவனம் இந்த நோக்கத்துக்காக வழிநடத்துவதைக் கண்டு நான் மிகவும் உற்சாகமடைகிறேன். இந்த முயற்சியை ஆதரித்த சுவிட்ஸர்லாந்து தூதரகத்தைப் பற்றி நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம் என்று நான் கூற விரும்புகிறேன்" - என்றார்.

இந்நிகழ்வில், ஆய்வில் பங்கேற்றிருந்த பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆய்வாளர்கள், துறைசார்ந்த கல்வியியலாளர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு சான்றிதழ்களும் அங்கீகார பாராட்டு விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் இலங்கையிலுள்ள சுவிட்ஸர்லாந்து தூதரகத்தின் சிரேஷ்ட தேசிய நிகழ்ச்சித் திட்ட அலுவலர் சுசாந்தி கோபாலகிருஷ்ணன், ஜேர்மனி டியூபிங்கன் பல்கலைக்கழகம், சமூக, கலாசார மானிடவியல் துறை பேராசிரியர் பொன்னி அரசு உட்பட இன்னும் பல துறைசார் புலமையாளர்கள் கலந்துகொண்டனர்.

# தேர்தல் முறைப்பாடுகளைத் தீர்ப்பது குறித்து விழிப்புணர்வுச் செயலமர்வு



(கிண்ணியா செய்தியாளர்)

மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான முறைப்பாடுகளைத் தீர்ப்பது குறித்து உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்குமான விழிப்புணர்வுச் செயலமர்வு திங்கட்கிழமை (28) திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த விழிப்புணர்வுச் செயலமர்வானது தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தற்போதைய உள்ளூராட்சி முறைமையின் தனித்துவமான அம்சங்கள் குறித்து தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் விளக்கமளித்தார்.

இதன்போது பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய நிகழ்நிலை மூலம் இணைந்து கொண்டு உரையாற்றினார். தேர்தல்களின்போது பொலிஸ் அதிகாரிகளின் பொறுப்புகள் குறித்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தினேஷ் கருணாநாயக்க, பொலிஸ் திணைக்களத்தின் சட்டப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர, தேர்தல் சட்டத்தின் சட்ட விதிகள் குறித்தும் விரிவுரைகளை வழங்கினர்.

தேர்தல் சட்டம், தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவ மையம் மற்றும் பொலிஸாரின் பொறுப்பு, தேர்தல் செலவின ஒழுங்குமுறை, பிரசார அலுவலகங்கள் மற்றும் பிரசார கட்டுப்பாடுகள் குறித்த தகவல்களை மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (சட்டம், விசாரணை மற்றும் திட்டங்கள்) பி.பீ.சி. குலரத்னவால் தெளிவூட்டப்பட்டன.மேலும், பொலிஸ் அதிகாரிகளின் தேர்தல் கடமைகள் குறித்த விரிவுரையானது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்கவால் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான டபிள்யூ.ஜி.எம்.ஹேமந்த குமார, திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் உதவி தெரிவத்தாட்சி அலுவலருமான எஸ். சுதாகரன், திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.கே.டி.நெரஞ்சன், பொலனறுவை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் மற்றும் பிரதேச பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# சம்பூரில் பெருந்தொகை கசிப்பு மீட்பு: 18வயது சந்தேகநபர் கைது



(மூதூர் செய்தியாளர்)

சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நல்லூர் கலப்புக் கடல் பகுதியில் சட்டவிரோதமாக இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையத்தை சம்பூர் பொலிஸார் திங்கட்கிழமை (28) முற்றுகையிட்டு பெருந்தொகை கசிப்பை மீட்டுள்ளதாகவும் சந்தேக நபரொருவரைக் கைதுசெய்துள்ளதாகவும் சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.பீ.டி. சந்திரசிறியின் ஆலோசனைக் கமைவாக சம்பூர் பொலிஸார் இச்சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது நான்கு பரல்களிலிருந்து கசிப்பு காய்ச்ச பயன்படுத்தப்படும் கோடா 757 போத்தல், கசிப்பு 31 போத்தல் மற்றும் வயர் உள்ளிட்ட உபகரணங்களையும் மீட்டுள்ளனர். அத்தோடு சம்பூர் - நல்லூர் பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய சந்தேக நபரையும் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் சம்பூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நிலையில், இவரை மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளை சம்பூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



2024ஆம் ஆண்டுக்கான க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் மட்டக்களப்பு, கல்லடி- உப்போடை விவேகானந்தா மகளிர் கல்லூரி மாணவி மங்களேஸ்வரன் டர்மி மூன்று பாடங்களிலும் ‘ஏ’ தரச் சித்தி பெற்று, மாவட்ட மட்டத்தில் 19ஆவது இடத்தைப்பெற்று வைத்தியத் துறைக்குத் தெரிவாகியுள்ளார். (கல்லடி செய்தியாளர்)



வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய மாணவத் தலைவிகளுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு திங்கட்கிழமை (28) பாடசாலை அதிபர் என்.சஹாப்தீன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அதிதிகளாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய மகளிர் விவகாரத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி திருமதி நிலாந்தி ,பொலிஸ் அதிகாரி ஏ.அமீர் அலி மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் லோகினி ஆகியோர் கலந்துகொண்டனர். (மீராவோடை செய்தியாளர்)


## Now you can subscribe the following Newspapers

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209

## மே 7இல் புதிய பாப்பரசரை தெரிவுசெய்யும் இரகசிய மாநாடு



பாப்பரசர் பிரான்சிஸின் மறைவைத் தொடர்ந்து புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்வதற்கான கர்தினால்களின் இரகசிய மாநாடு எதிர்வரும் மே 07ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக வத்திக்கான் அறிவித்துள்ளது.

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் (வயது - 88) உடல்நலக் குறைவால் கடந்த 21ஆம் திகதி காலமானார். அவரது பூதவுடல் ரோம் நகரிலுள்ள செயின்ட் மேரி மேஜர் தேவாலயத்தில் கடந்த 26ஆம் திகதி நல்லடக்கம் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து 9 நாட்கள் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், பாப்பரசர் மறைவைத் தொடர்ந்து அடுத்த கட்டமாக புதிய பாப்பரசரைத் தெரிவு செய்வதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்வதற்கான கர்தினால்களின் இரகசிய மாநாடு எதிர்வரும் மே 07ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக வத்திக்கான் நேற்றுமுன்தினம் அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

வத்திக்கானிலுள்ள 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாரம்பரியமிக்க சிஸ்டைன் சேப்பல் தேவாலயத்தில் கர்தினால்களின் இரகசிய மாநாடு நடத்தப்படும். பாரம்பரிய வழக்கப்படி இந்த மாநாடு 9 நாட்கள் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்ட பின்னர் தொடங்கும்.

மொத்தமுள்ள 252 கர்தினால்களில் 135 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்கள். இதில் 108 கர்தினால்கள் பாப்பரசர் பிரான்சிஸால் நியமிக்கப்பட்டவர்கள். 135 கர்தினால்கள் சிஸ்டைன் சேப்பலில் நடக்கும் இரகசிய மாநாட்டில் பங்கேற்பார்கள். அப்போது இந்தச் சேப்பல் மூடி சீலிடப்படும்.

புதிய பாப்பரசர் தெரிவுசெய்யப்படும் வரையிலும் கர்தினால்களை வெளியுலகிலிருந்து எவரும் தொடர்புகொள்ள முடியாது. புதிய பாப்பரசரை தெரிவுசெய்ய கர்தினால்கள் வாக்குச்சீட்டில் தங்கள் வாக்கை அளிப்பார்கள். இரண்டில் 3 பங்கு பெரும்பான்மை பெறுபவர்கள் புதிய பாப்பரசராக அறிவிக்கப்படுவார்கள். இந்தப் பெரும்பான்மை எட்டாத பட்சத்தில் வாக்குச்சீட்டுகள் எரிக்கப்படும். அதன் மூலம் சேப்பலின் கூரையிலுள்ள சிம்னி மூலமாக கரும்புகை வெளியிடப்படும். புதிய பாப்பரசர் தெரிவுசெய்யப்பட்டவுடன் அதை வெளியுலகுக்கு உணர்த்தும் வகையில் வெண் புகை வெளியிடப்படும். அதோடு தேவாலய மணி ஒலிக்கப்படும்.

## 4ஆவது தடவையாகவும் ஆட்சியைப் பிடித்த லிபரல் கட்சி

# கனேடிய பிரதமராகிறார் மார்க் கார்னி!

### ''அமெரிக்காவுடனான உறவுக்கு முடிவு''- என அறிவிப்பு!






அமெரிக்காவின் வர்த்தகப் போர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் நடைபெற்ற கனடா பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் பிரதமராக மார்க் கார்னி (Mark Carney) பதவியேற்கவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் உரையாற்றிய மார்க் கார்னி, அமெரிக்காவுடனான பழைய உறவு முடிந்துவிட்டதாகத் தெரிவித்தார்.

கனடா பிரதமராக இருந்த ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகிய பின்னர் லிபரல் கட்சியின் தலைவராகவும் புதிய பிரதமராகவும் பதவியேற்ற மார்க் கார்னி, சில நாட்களிலேயே அமைச்சரவையைக் கலைத்து தேர்தலை அறிவித்தார்.

கனடாவைக் கைப்பற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அச்சுறுத்தலுக்கு மத்தியில், திங்கட்கிழமை (28) தேர்தல் நடைபெற்ற நிலையில், நேற்று (29) காலையுடன் வாக்களிப்பு நடவடிக்கைகள் யாவும் நிறைவடைந்தன.

343 உறுப்பினர்களைக்கொண்ட கனடா பாராளுமன்றத்துக்கு (ஹவுஸ் ஒப் கொமன்ஸ்) நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன. பெரும்பான்மைக்கு 172 இடங்களில் வெற்றிபெற வேண்டும். இதில், பிரதமர் மார்க் கார்னி தலைமையிலான லிபரல் கட்சி 43.4% வாக்குகளுடன் 167 இடங்களில் முன்னிலை வகிக்கிறது (பத்திரிகை அச்சுக்கு செல்லும்வரை). பியர் பொய்லிவ்ரே தலைமையிலான கன்சர்வேடிவ் கட்சி 41.5% வாக்குகளுடன் 145 இடங்களில் முன்னிலை வகிக்கிறது. இதர 3 கட்சிகள் மொத்தம் 31 இடங்களில் முன்னிலை வகிக்கின்றன.

ஏற்கனவே தொடர்ந்து 3 தடவைகள் வெற்றிபெற்று ஆட்சியிலிருக்கும் லிபரல் கட்சி 4ஆவது தடவையாகவும் வெற்றி பெற்றுள்ளது. பெரும்பான்மைக்குப் போதிய இடங்கள் கிடைக்காவிட்டாலும் சிறிய கட்சிகளின் உதவியுடன் லிபரல் கட்சி ஆட்சியமைக்கும் என்பதால் அதன் ஆதரவாளர்கள் உற்சாகமடைந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து, கனடாவில் வெற்றிக் கொண்டாட்டத்தை லிபரல் கட்சியினர் தொடங்கியுள்ளனர்.

லிபரல் கட்சியின் வெற்றியைத் தொடர்ந்து ஒட்டாவாவில் ஆதரவாளர்களுடன் பேசிய மார்க் கார்னி,

''அமெரிக்காவுடனான பழைய உறவு முடிந்துவிட்டது. அமெரிக்கா செய்த துரோகத்தின் அதிர்ச்சியிலிருந்து நாம் மீண்டுவிட்டோம். ஆனால், நாம் கற்றுக்கொண்ட பாடங்களை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. நாம் நம்மை கவனித்துக் கொள்ள வேண்டும். இந்த வர்த்தகப் போரில் நாம் வெற்றிபெறுவோம். அமெரிக்கா நம்மை சொந்தமாக்கிக்கொள்வதற்காக நம்மை பிளவுபடுத்த ஜனாதிபதி ட்ரம்ப் முயற்சிக்கிறார். அது ஒருபோதும் நடக்காது" எனத் தெரிவித்துள்ளார்.

**ட்ரம்ப் அச்சுறுத்தல்கள்:**

கடந்த ஜனவரியில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், அமெரிக்காவின் மற்றொரு மாகாணமாக கனடா இணையவேண்டும் என்று வலியுறுத்தினார். அப்போது கனடாவின் பிரதமராக இருந்த ஜஸ்டின் ட்ரூடோவை ''ஆளுந'' என ட்ரம்ப் அழைத்தார். கனடாவில் லிபரல் கட்சியின் செல்வாக்கு சரிந்துவிட்டதாகச் செய்திகள் வெளியான நிலையில், ஜஸ்டின் ட்ரூடோ பிரதமர் பதவியிலிருந்து விலகி மார்க் கார்னியை பிரதமராக்கினார்.

**கை கொடுத்த பிரசாரம்:**

தொழிலதிபரும் வங்கியாளருமான மார்க் கார்னி, இந்தத் தேர்தலில் ட்ரம்ப் விடுத்த இணைப்பு கோரிக்கைக்கு எதிராக பிரசாரம் மேற்கொண்டார். கனடாவில் கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சிக்கு வந்தால், ட்ரம்ப் கூறியது நிஜமாகும் என்றும் அவர் பிரசாரம் செய்தார். ட்ரம்ப்பின் கருத்தை மையப்படுத்தி அவர் மேற்கொண்ட தேர்தல் பிரசாரம் அவருக்கு கை கொடுத்துள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# இந்திய இராணுவ ஊடுருவல் நிகழும்; நாங்கள் தயாராகவுள்ளோம்!

### பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர்



இந்திய இராணுவம் விரைவில் பாகிஸ்தானுக்குள் ஊடுருவும் என்றும் அதனைத் தவிர்க்க முடியாது என்றும் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் கவாஜா முஹமது ஆசிப் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத்தில் ரொய்ட்டரஸ் செய்தி நிறுவனத்துக்கு கவாஜா முஹமது ஆசிப் அளித்த பேட்டியில்,

"இராணுவ ஊடுருவல் நிகழும். தற்போது அது தவிர்க்க முடியாததொன்று என்பதால் நாங்கள் எங்கள் படைகளைப் பலப்படுத்தியுள்ளோம். தற்போதைய சூழலில் எத்தகைய யுக்திகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன" என்று தெரிவித்துள்ளார்.


இந்தியாவிலிருந்து வெளியேறும் பாகிஸ்தானியர்....

இந்தியா தாக்குதல் நடத்தவுள்ளதற்கான சாத்தியம் குறித்து பாகிஸ்தான் இராணுவம் அரசுக்குத் தகவல் தெரிவித்துள்ளதாகவும் கவாஜா முஹமது ஆசிப் கூறியுள்ளார். அதேநேரத்தில், விரைவில் ஊடுருவல் நிகழும் என்று அவர் நினைப்பதற்கான காரணங்கள் குறித்து அவர் கூறவில்லை.

பாகிஸ்தானின் அணு ஆயுத பிரயோகம் குறித்த கேள்விக்குப் பதிலளித்த கவாஜா, "இவ்விடயத்தில் பாகிஸ்தான் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கும். அதேநேரத்தில், எங்கள் இருப்புக்கு நேரடி அச்சுறுத்தல் இருந்தால் மட்டுமே அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவோம்" என்று தெரிவித்துள்ளார்.

போரை தவிர்க்க பாகிஸ்தான் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விளக்கிய கவாஜா, "வளைகுடா நாடுகள் மற்றும் சீனா உள்ளிட்ட நட்பு நாடுகளை அணுகினோம். பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் பிற நாடுகளுக்கும் நிலைமை குறித்து விளக்கமளித்துள்ளோம். அரேபிய வளைகுடாவிலுள்ள எங்கள் நண்பர்கள் சிலர் இரு தரப்பினருடனும் பேசியுள்ளனர்" என்று தெரிவித்துள்ளார்.

இந்தியாவும் பாகிஸ்தானும் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று நேற்றுமுன்தினம் (28) சீனா வேண்டுகோள் விடுத்தது. மேலும், நிலைமையைத் தணிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் வரவேற்பதாகவும் அது கூறியது.

இந்த விவகாரத்தில் தலையிடுவதிலிருந்து அமெரிக்கா 'விலகி' இருப்பதாக கவாஜா தெரிவித்தார். இந்தியாவும் பாகிஸ்தானும் தங்களுக்கிடையேயான உறவுகளை முடிவுசெய்யும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கடந்த வாரம் தெரிவித்தார். எனினும், இரு தரப்பினருடனும் தொடர்பில் இருப்பதாகவும் 'பொறுப்பான தீர்வை' நோக்கிச் செயற்படுமாறு வலியுறுத்துவதாகவும் அமெரிக்க வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

**இந்தியாவை விட்டு வெளியேறாத பாகிஸ்தானியருக்கு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை**

இதேவேளை, இந்திய மத்திய அரசு விதித்துள்ள குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் இந்தியாவை விட்டு வெளியேறாத பாகிஸ்தானியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அவர்கள் கைதுசெய்யப்படுவதுடன் சிறைத்தண்டனையும் விதிக்கப்படுமென்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜம்மு-காஷ்மீரின் 'மினி சுவிட்சர்லாந்து' என்று அழைக்கப்படும் பைசரன் பள்ளத்தாக்கில் கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி பாகிஸ்தான் தொடர்புடைய தீவிரவாதி நடத்திய கொடூரத் தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இவர்களுள் பெரும்பாலானோர் சுற்றுலாப் பயணிகள்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து இந்தியாவில் வசிக்கும் பாகிஸ்தானியர்களின் விசாக்களை இந்திய மத்திய அரசு உடனடியாக இரத்துசெய்தது. சார்க் விசா வைத்துள்ளவர்கள் வெளியேறுவதற்கான காலக்கெடு கடந்த 26ஆம் திகதியுடன் முடிவடைந்தது. மருத்துவ விசாவில் வந்தவர்கள் வெளியேறுவதற்கான காலக்கெடு நேற்றுடன் (29) முடிவடைந்தது.

வருகை, வணிகம், திரைப்படம், ஊடகவியலாளர், போக்குவரத்து, மாநாடு, மலையேறுதல், மாணவர், பார்வையாளர், குழு சுற்றுலா, யாத்திரிகர் மற்றும் குழு யாத்திரை உள்ளிட்ட 12 பிரிவுகளில் விசாக்களைப் பெற்று இந்தியா வந்த பாகிஸ்தானியர்கள் அனைவரும் ஏப்ரல் 27ஆம் திகதியுடன், அதாவது கடந்த ஞாயிற்றுக்கிழமையுடன் வெளியேறியிருக்க வேண்டும்.காலக்கெடுவுக்குப் பின்னரும் இந்தியாவில் தங்கியுள்ள பாகிஸ்தானியர்கள் அனைவரும் கைதுசெய்யப்படுவர். கடந்த ஏப்ரல் 04ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ள குடிவரவு மற்றும் வெளிநாட்டினர் சட்டம் 2025இன்படி, அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்வதுடன், 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது அதிகபட்சம் ரூ.3 இலட்சம் (இந்திய ரூபாபடி) அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாகப் பெற்றுத்தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


**காஷ்மீரிலுள்ள 48 சுற்றுலாத் தலங்களுக்குப் பூட்டு**

இந்நிலையில், ஜம்மு-காஷ்மீர் அரசு காஷ்மீரிலுள்ள 87 சுற்றுலாத்தலங்களில் 48 இடங்களை தற்காலிகமாக மூடுவதாக அறிவித்திருக்கிறது. இந்த 48 இடங்கள் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்டுள்ளன அல்லது பாதிக்கப்படக்கூடியதாகக் கருதப்படும் பகுதிகளில் அமைந்துள்ளன என்பதால் மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தப் பகுதிகளில் பயங்கரவாதிகள் மீண்டும் தாக்குதல் நடத்தலாமென உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

**அடையாளம் காணப்பட்ட தாக்குதல்தாரி**

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணையில், மூளையாகச் செயற்பட்டதாக அடையாளம் காணப்பட்ட பாகிஸ்தான் பயங்கரவாதி ஹாஷிம் மூசா, பாகிஸ்தான் இராணுவத்தின் முன்னாள் பாரா கொமாண்டோ என்பது தெரியவந்துள்ளது.

## உக்ரைனுடன் மூன்று நாட்கள் போர் நிறுத்தம் அறிவித்த புட்டின்



ரஷ்ய ஜனதிபதி விளாடிமிர் புட்டின் உக்ரைனுடன் மூன்று நாட்கள் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளார்.


இதுகுறித்து ரஷ்ய ஜனாதிபதி மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

''மனிதாபிமான காரணங்களுக்கான அடிப்படையில் ஜனாதிபதி புட்டின் மே 08 முதல் 10 வரை போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளார். இதனை உக்ரைனும் பின்பற்ற வேண்டும். ஆனால், இதனை மீறி உக்ரைன் தாக்குதல் நடத்தும் பட்சத்தில் ரஷ்யா அதற்கான தகுந்த பதிலடியைக் கொடுக்கும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அண்மையில் தனது சமூக வலைத்தளத்தில் பதிவொன்றை வெளியிட்டிருந்தார். அதில் ''உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யா நடத்திவரும் தாக்குதலால் நான் மகிழ்ச்சியடையவில்லை. அது அவசியமில்லை. மிகவும் மோசமான நேரம். விளாடிமிர், நிறுத்து! வாரத்துக்கு 5,000 வீரர்கள் உயிரிழக்கின்றனர்'' - என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்ததைக் குறிக்கும் வகையில் கொண்டாடப்படும் மே 09 வெற்றி தினத்தையொட்டி புட்டின் இந்தப் போர்நிறுத்த அறிவிப்பை அதிரடியாக வெளியிட்டுள்ளார். இதற்கு பல்வேறு உலக நாடுகள் வரவேற்பு தெரிவித்துள்ளன.

## வாழ்நாள் சாதனையாளர் விருது பெறும் ஜக்கி சான்



பிரபல நடிகர் ஜக்கி சான் (Jackie Chan) திரைத்துறையில் படைத்த சாதனைகளுக்காக வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

நடிகர், இயக்குநர், எழுத்தாளர், தயாரிப்பாளர், பாடகர், முக்கியமாக சண்டைக் கலைஞர் என பல வித்தைகளைக் கற்றுத் தேர்ந்து ஆசிய கண்டத்தைக் கடந்து, ஹொலிவுட் உலகை தம் பக்கம் திருப்பி விண்ணளவு வியந்து பார்க்கச் செய்த ஜக்கி சானுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதளிக்கப்படவுள்ளது.

71 வயதைக் கடந்தாலும் இளமைத் துடிப்புடன் செயற்படும் ஹொங்கொங்கைச் சேர்ந்த ஜக்கி சானுக்கு சுவிட்ஸர்லாந்தில் ஓகஸ்ட் முதல் வாரம் நடைபெறவுள்ள 78ஆவது 'லோகேர்னோ திரைப்பட விழாவில்' இந்த உயர் கௌரவம் வழங்கப்படவுள்ளது. அவர் ஓகஸ்ட் 09ஆம் திகதி இந்த விருதைப் பெற்றுக்கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

1960களில் குழந்தை நட்சத்திரமாக திரையுலகில் அடியெடுத்து வைத்த ஜக்கி சானுக்கு சாதனைகள் புதிதல்ல என்றாலும், சர்வதேச அளவில் புகழ்பெற்ற 'லோகேர்னோ திரைப்பட விழா' அரங்கில் விருது வழங்கப்படவுள்ளமை பெருமையானதொரு மகுடமாகும்.

# உள்ளூராட்சி மன்றங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்கவும்

## தேசிய மக்கள் சக்தியின் மஸ்கெலியா அமைப்பாளர் சத்திய மூர்த்தி

(மஸ்கெலியா நிருபர்)

நாட்டின் ஜனாதிபதியையும் பொதுத் தேர்தலில் 159 பாராளுமன்ற உறுப்பினர்களையும் பெற்றுக்கொடுத்த நீங்கள் நாட்டிலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் எமது பொறுப்பில் ஒப்படைக்க வேண்டுமென தேசிய மக்கள் சக்தியின் மஸ்கெலியா பகுதி அமைப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் மஸ்கெலியா பிரதேச சபைக்குப் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து மஸ்கெலியா நகரில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுல சுரவீர தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கலைச்செல்வி மற்றும் மஸ்கெலியா பகுதி அமைப்பாளர் சத்தியமூர்த்தி உட்பட மஸ்கெலியா பிரதேச சபைக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

இந்த 76 ஆண்டு காலமாக எமக்கு நடந்த மாற்றங்கள் என்ன என்பதை முதலில் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். முதலில் நாம் பாடசாலைகளை எடுத்துக்கொள்வோம். நம் மலையகத்தைப் பொறுத்தவரையில் இரு வகையான பாடசாலைகள் உள்ளன. ஒன்று வசதி கூடிய பாடசாலை, இன்னொன்று வசதி குறைந்த பாடசாலை. இங்கு வசதி கூடிய பாடசாலை பற்றி யோசிக்கவேண்டியதில்லை. ஆனால், வசதி குறைந்த பாடசாலைகளைப் பற்றிப் பார்த்தால் கட்டிட வசதி பற்றாக்குறை தான் மிக முக்கிய பிரதான பிரச்சினையாகவுள்ளது. அத்துடன், மலசலகூடம், குடிநீர் உள்ளிட்ட பல பிரச்சினைகள் உள்ளன.

இத்தனை ஆண்டுகளாக இவ்வளவு அரசியல் தலைவர்கள் இருந்தும் எம்மால் அனைத்து பாடசாலைகளிலும் ஒரே மாதிரியான வசதிகளை செய்துகொள்ள முடியவில்லை. இதுபோன்ற பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக நிரந்தரத் தீர்வுக்காக மலையகத்துக்கு மாத்திரம் ரூ.866 மில்லியன் தொகையை ஜனாதிபதி வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ளார். அதுமட்டுமல்லாமல் தோட்டப் பகுதிகளில் சீரான பாதைகள் இல்லை. இதையாவது கடந்த கால ஆட்சியாளர்கள் செய்துகொடுத்தார்களா? ஆனால், அவர்கள் வீடுகளுக்குச் செல்லும் பாதைகளை கார்பட் பாதைகளாக மாற்றிக்கொண்டுள்ளார்கள். இது தான் அவர்கள் செய்த மாற்றங்கள். அதனால் இதனை மாற்றியமைக்கவே கிராமிய மட்ட



வீதிகளை புனரமைப்பதற்காக ரூ.35,500 கோடியையும் பாலங்கள் புனரமைப்பதற்காக 2,200 கோடி ரூபாவையும் ஜனாதிபதி வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ளார்.

இது மட்டுமல்லாமல் கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகளுக்கான போஷணைத் திட்டத்துக்காக 750 கோடி ரூபாவை எமது அரசாங்கம் ஒதுக்கியுள்ளது . அரசாங்கம் ஒதுக்கியுள்ள நிதியைக் கொண்டு மக்களுக்கான சேவைகளைச் செய்ய ஒவ்வொரு ஊர்களிலிருந்தும் ஒவ்வொரு வட்டாரங்களிலிருந்தும் உறுப்பினர்கள் தேவை. அதற்காக நாம் அவர்களுக்கு எதிர்வரும் 06ஆம் திகதி எமது வாக்குகளை அவர்களுக்கு வழங்கி அவர்களை வெற்றிபெறச் செய்து எமக்கான வேலைத்திட்டங்களுக்கான நிதியை நாம் முழுமையாகப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்தார்.

# கடந்த காலங்களில் விட்ட தவறை இம்முறை தேர்தலில் விடவேண்டாம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வேண்டுகோள்

(எம்.எஸ்.எம்.மசாஹிம்)

தேசிய மக்கள் சக்திக்கு கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலின் போது வாக்களித்து இரண்டு தடவைகள் தவறிழைத்த இந்நாட்டு மக்கள், எதிர்வரும் 06ஆம் திகதி இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து மூன்றாவது தடவையும் தவறிழைக்காமல் சிந்தித்து செயற்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்வரும் 06ஆம் திகதி இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் வசந்த அலுவிஹார தலைமையில் மாத்தளையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலின்போது அநுரகுமார திசாநாயக்க மற்றும் அக்கட்சியின் உறுப்பினர்கள் தெரிவித்த பொய் வாக்குறுதிகளுக்கு சோரம்போய் ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார திசாநாயக்கவை வெற்றிபெறச் செய்து ஜனாதிபதி ஆசனத்தில் அமர வைத்தார்கள். தொடர்ந்து இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் அநுரகுமார



திசாநாயக்கவின் பொய் வாக்குறுதிகளை நம்பி பாராளுமன்றத்தில் 225 உறுப்பினர்களில் 159 உறுப்பினர்களை பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்து இரண்டு தவறுகளைச் செய்துள்ளார்கள். நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து இந்நாட்டு மக்கள் மூன்றாவது தடவையாகவும் தவறிழைக்கக் கூடாது.


மாத்தளை மாவட்டத்தில் இருக்கும் மாத்தளை, தம்புள்ளை மாநகர சபைகள் உட்பட சகல உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தையும் ஐக்கிய மக்கள் சக்திக்கு பெற்றுத்தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர் கடந்த இரண்டு தேர்தல்களிலும் மக்களிடம் வாக்களித்த எந்தவொரு வாக்குறுதியையேனும் இதுவரை நிறைவேற்றியிருக்கிறார்களா என கேட்கின்றேன். கள்வர்களைப் பிடிப்போம்,வெளிநாடுகளுக்கு கொண்டுசென்ற பணங்களை இந்நாட்டுக்கு மீண்டும் கொண்டுவருவோம் என்றார்கள். ஆனால், ஒன்றுமே நடந்ததாகத் தெரியவில்லை. ஆனால், அக்கட்சினருக்கெதிராகக் குரல் கொடுக்கும் அரசியல்வாதிகளும் சமூகமேம்பாட்டாளர்களும் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார்கள். துப்பாக்கிக் கலாசாரம் அதிகரித்து இன்று நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பாதுகாப்பற்ற சூழல் உருவாகியுள்ளது.

இன்று அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அசுர வேகத்தில் உயர்ந்து செல்வதால் சாதாரண கூலித்தொழில் புரிபவர்களும் விசேடமாக தோட்டத் தொழிலாளர்களும் தங்களது அன்றாட வாழ்க்கையைக் கொண்டுசெல்லமுடியாத அளவுக்கு நாடு பொருளாதார ரீதியாகப் பின்னடைவுக்குத் தள்ளப்பட்டுள்ளது. தற்போதைய ஆட்சியாளர்களுக்கு நாட்டை அபிவிருத்திசெய்யும் அறிவோ சிந்தனையோ அல்லது அனுபவமோ இல்லாது நாட்டை ஒவ்வொரு திசையிலும் பிசைந்துகொண்டு இருப்பதையே அவதானிக்கிக்றோம். இந்த நிலை தொடருமானால் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாக மாறிவிடும்.

ஆகவே, கடந்த இரண்டு தேர்தல்களிலும் தவறிழைத்த நாம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் தவறிழைக்காமல் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்யுங்கள் - என்றார்.

# மவுசாக்கலை நீர்த்தேக்கத்துக்கு செல்வோருக்கு எச்சரிக்கை



(மஸ்கெலியா நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தில் நிலவும் கடும் வெப்பமான வானிலை காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.

குறிப்பாக, மவுசாக்கலை நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 33 அடி குறைந்துள்ளது.

அதன் காரணமாக 1969 ஆம் ஆண்டு நீரில் மூழ்கிய மஸ்கெலியா ஸ்ரீ சண்முக நாதர் ஆலயம், இஸ்லாமிய பள்ளியிலிருந்த தூபி, பௌத்த விகாரையிலிருந்த புனித புத்தர் சிலை, கங்குவத்தை நகரிலிருந்த சித்தி விநாயகர் ஆலயம் என்பன தற்போது நீரிலிருந்து வெளித் தோன்றியுள்ளதால் மக்கள் சென்று வழிபட்டு வருகின்றனர்.

மேலும், இந்த நிலை தோன்றும் பட்சத்தில் இந்தப் பகுதிக்கு அதிகளவில் உள்நாட்டு - வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சென்று வழிபட்டு வருகின்றனர்.

தற்போது காலை வேளையில் கடும் வெப்பம் நிலவி வருகிறது. மாலை வேளையில் கனத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக இந்த நீர்த் தேக்கப் பகுதிக்குச் செல்லும் மக்கள் சகதி நிறைந்த பகுதிகளினூடாகச் செல்லவேண்டாமென்று மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# மாதகலில் கஞ்சா - வாள்கள் மீட்பு; மூவர் கைது!

(யாழ். நிருபர்)

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதகல் பகுதியில் கஞ்சா மற்றும் வாள்களுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது நிலத்தில் புதைத்து வைக்கப் பட்டிருந்த 2 கிலோ 600 கிராம் கஞ்சாவும் மூன்று வாள்களும் ஒரு கூரிய ஆயுதமும் மீட்கப்பட்டன.

சந்தேகநபர்கள் மூவரும் இளவாலை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். விசாரணைகளின் பின்னர் அவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# யாழில் மின்னல் தாக்கத்தால் 19 பேர் பாதிப்பு

(யாழ். நிருபர்)

யாழில் ஏற்பட்ட மின்னல் தாக்கத்தால் இதுவரை 6 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 4 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவுப் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/208 கிராம சேவகர் பிரிவில் இரு குடும்பங்களைச் சேர்ந்த 7 பேரும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/279 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/301 கிராம சேவகர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 3 பேரும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/426 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் – என்றார்.

# யாழில் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான செயலமர்வு



(பு.கஜிந்தன்)

உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல் தொடர்பாக வாக்குப்பெட்டிகள், வாக்குச் சீட்டுகள் மற்றும் ஆவணங்கள் விநியோகித்தல், பாரமெடுத்தல் போன்ற கடமைகளில் ஈடுபடவுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான முன்னாயத்த செயலமர்வானது யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபனின் தலைமையில் நேற்று முன்தினம் (28) மு.ப. 10.00 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இச்செயலமர்வில் கருத்துத் தெரிவித்த தெரிவத்தாட்சி அலுவலர்,

எதிர்வரும் மே மாதம் 06ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் தொடர்பாக 35 நிலையங்களிலிருந்து 517 வாக்களிப்பு நிலையங்களுக்கும் வாக்குப் பெட்டிகள், வாக்குச் சீட்டுகள் அதற்குரிய ஆவணங்களை விநியோகிக்கும் மற்றும் பாரமெடுக்கும் நிலையமாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி செயற்படவுள்ளது. அந்நிலையங்களுக்கு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமிக்கப்படும் அலுவலகர்களின் பங்களிப்பானது மிகவும் முக்கியத்துவமானது.

மேலும், 05.04.2025 ஆம் திகதியன்று காலை 07.00 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு சமுகமளித்து வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு உரிய வகையில் வாக்குப் பெட்டிகளையும் ஆவணங்களையும் கையளிக்கும் அதேவேளை, 06.05.2025ஆம் திகதி பி.ப. 05.00 மணியிலிருந்து வாக்களிப்பு நிறைவடைந்த பின்னர் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களால் கையளிக்கப்படவுள்ள வாக்குப் பெட்டிகளையும் ஆவணங்களையும் உரிய வகையில் பெற்றுக்கொள்வதில் மிக வினைத்திறனாக செயற்பட வேண்டும்.

அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட்டு நீதியாகவும் சுதந்திரமாகவும் தேர்தல் நடைபெற சிறப்பான ஒத்துழைப்பை நல்கவேண்டும். நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் நீதியாகவும் சுமுகமாகவும் நடைபெற்றன. அதற்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்காக நன்றி – என்றார்.

உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ. சசீலனால் வாக்குப்பெட்டி விநியோகித்தல் மற்றும் பாரமெடுத்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இச்செயலமர்வில் களஞ்சியத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலரான பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரனும் கலந்துகொண்டார்.

# வலி. கிழக்கில் சுயேச்சைக் குழு 1இன் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு

(யாழ். நிருபர்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் போட்டியிடும் சுயேச்சைக் குழு 1இன் தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு கடந்த ஞாயிற்றுக்கிழமை (27) நடைபெற்றது.

சுயேச்சைக் குழுவானது தொலைக்காட்சி சின்னத்தில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் மாத்திரம் போட்டியிடுகின்றது.

இந்த சுயேச்சைக் குழுவின் செயலாளர் இ.ஐங்கரன் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைக்க அதனை சுயேச்சைக்



குழுவின் முதன்மை வேட்பாளரான அ.ரஜீவன் பெற்றுக்கொண்டார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வலிகாமம் கிழக்கில் அதிகளவான ஆசனங்களைக் கைப்பற்றி வெற்றிபெற்று மக்களுக்குத் தேவையான சேவைகளைச் செய்வதே எமது நோக்கமென அந்த சுயேச்சைக் குழுவில் போட்டியிடும் வேட்பாளர்கள் தெரிவித்தனர்.

# யாழில் இளம் குடும்பப் பெண் உயிர்மாய்ப்பு

(பு.கஜிந்தன்)

யாழில் இளம் குடும்பப் பெண்ணொருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை (27) தவறான முடிவெடுத்து தனக்குத் தானே தீ வைத்து உயிர் மாய்த்துள்ளார். இணுவில் கிழக்கு, கொக்கன் வளவு பகுதியைச் சேர்ந்த நிவேதனன் விஜிதா (வயது 30) என்ற இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண் கடந்த ஞாயிற்றுக்கிழமை குளிப்பதற்கென்று சென்றுள்ளார். பின்னர் அங்கு தனக்குத் தானே தீ மூட்டி உயிர்மாய்த்துள்ளார். மன விரக்தி காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# ஊடகவியலாளர் தராக்கி சிவராமின் நினைவேந்தல் மன்னாரில்



(ஜோசப் நயன்)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தராக்கி சிவராமின் நினைவேந்தல் நிகழ்வும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஏற்பாடு செய்த மக்கள் சந்திப்பும் நேற்று முன்தினம் (28) மாலை மன்னார் நகரசபை மண்டபத்தில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் இடம்பெற்றன.

இதன்போது படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தராக்கி சிவராமின் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மக்கள் சந்திப்பு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், சட்டத்தரணி சுகாஸ், தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் சட்டத்தரணி சிறிகாந்தா உட்பட உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர்.

# வலி. கிழக்கில் சுயேச்சைக் குழு-02இன் அலுவலகம் திறந்து வைப்பு



(யாழ். நிருபர்)

வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபையில் கைக்கோடரி சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழு-02இன் 10ஆம் வட்டாரத்துக்கான அலுவலகம் நேற்று முன்தினம் (28) திங்கட்கிழமை தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சனால் திறந்துவைக்கப்பட்டது.

தொழிலதிபர் சுலக்சனின் வழிகாட்டலில் வலிகாமம் கிழக்கில் சுயேச்சைக் குழு - 2 இல் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். தனது வேட்பாளர்களை ஆதரித்து கோப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் தீவிர பிரசாரப் பணிகளில் ஈடுபட்டுள்ள சுலக்சன் 10ஆம் வட்டாரத்துக்கான அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் 10ஆம் வட்டார வேட்பாளரான சிவயோகராசா சிவநிக்ஸன், சக வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# LPL தொடரிலிருந்து ஜப்னா கிங்ஸ், கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அதிரடி நீக்கம்



(அகீல் சிஹாப்)

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெறும் லங்கா ப்ரீமியர் லீக் ரி20 தொடரில் பங்கேற்கும் அணிகளான 4 தடவைகள் சம்பியனான ஜப்னா கிங்ஸ் மற்றும் கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணிகள் லங்கா ப்ரீமியர் லீக் தொடரின் உரிமையாளர் கூட்டாண்மையிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

லீக்கில் பங்கேற்பதன் தொடக்கத்தில் ஏற்பட்ட ஒப்பந்தங்களின் கீழ் நிர்ணயிக்கப் பட்ட ஒப்பந்தக் கடமைகளை அந்தந்த உரிமையாளர்கள் நிறைவேற்றத் தவறிய தால், இந்த உரிமையாளர்கள் நிறுத்தப்பட் டதாக ஐ.ஜி.பி. குழுமம் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு முறையாகத் தெரிவித்துள்ளது.

மேற்கூறியவற்றின் விளைவாக, வரவிருக்கும் 2025 லங்கா ப்ரீமியர் லீக்கில் கொழும்பு மற்றும் ஜப்னா அணியை பிரதிநிதித்துவப் படுத்தும் உரி மையாளர்கள் புதிய உரிமை யின் கீழ் இடம் பெறுவார்கள். இதனால் அணி களின் பெயர்களி லும் மாற்றங்கள் நிகழ வாய்ப்புள்ளது.

# சாதனை சதம் விளாசிய 14 வயது சூரியவன்சி

## ராஜஸ்தானுக்கு இலகு வெற்றி



ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் வெறும் 14 வயதுகொண்ட இளம் வீரர் வைபவ் சூரியவன்சியின் மிரட்டலான சாதனை சதத்தின் உதவி யுடன் ராஜஸ் தான் அணி 8 விக்கெட் டுகள் வித்தி யாசத்தில் அபார வெற்றியீட் டியது.

ஜெய்ப் பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 47சூவது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் - குஜராத் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணியின் தலைவர் ரியான் பராக் முதலில் பந்துவீச்சை தெரிவுசெய்தார்.

இதனையடுத்து துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 209 ஓட்டங்கள் எடுத்தது.

210 ஓட்டங்கள் என்ற கடின இலக்குடன் ராஜஸ்தான் அணி விளையாடியது. இதில் 14 வயதேயான சூரியவன்ஷி ஜெய்ஸ்வாலுடன் இணைந்து குஜராத் அணியின் பந்துவீச்சை சுக்குநூறாக உடைத்தனர். சூரியவன்சி தன்னுடைய ருத்ரதாண்டவத்தை ஆடினார். அவர் 17 பந்துகளில் அரை சதம் விளாசி சாதனை படைக்க, ரி20 கிரிக்கெட் மற்றும் ஐபிஎல் கிரிக்கெட்டில் அரை சதம் விளாசிய இளம் வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

தொடர்ந்து ஆக்ரோஷமாக ஆடிய அவர், ஒரே ஓவரில் 30 ஓட்டங்கள் அடித்தார். இதன் மூலம் 35 பந்துகளில் சதம் விளாசினார். ஐ.பி.எல். வரலாற்றில் அடிக்கப்பட்ட 2ஆவது அதிவேக சதம் இதுவாகும். ரி20 வரலாற்றில் சதம் அடித்த இளம் வீரர் என்ற பெருமையும் சூர்யவன்ஷி படைத்தார்.

இறுதியில் 15.5 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்த நிலையில், ராஜஸ்தான் அணி வெற்றியிலக்கை அடைந்தது.

# கொழும்பு விவேகானந்தா பழைய மாணவிகளின் வலைப்பந்தாட்ட தொடர்




கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பழைய மாணவிகளுக்கிடையில் இடம்பெறவுள்ள வலைப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

கொழும்பு விவேகானந்தா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் மகளிர் பிரிவினர் வருடந்தோறும் நடத்தும் மகளிர் தின நிகழ்வுகளின் ஓர் அங்கமாக வலைப்பந்தாட்டப் போட்டிகள் கடந்த 10 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன.

2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தற்போதே பல்வேறு நிகழ்வுகள் ஆரம்ப மாகியுள்ளதுடன், அதன் ஓர் அங்கமாக நடைபெறவுள்ள வலைப்பந்தாட்டப் போட்டிகளில் காளஸ்திகா, ருத்ரா, ஆர்யா, வேலு நாச்சியார் படை, நீலாம்பரி என ஐந்து அணிகள் இம்முறை பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

அனைத்து அணிகளும் ஏனைய அணி களுடன் மோதும் வகையில் லீக் சுற்றுப் போட்டிகள் முதலில் இடம்பெறும். லீக் சுற்று முடிவுகளின் அடிப்படையில் முதல் நான்கு இடங்களைப் பெறும் அணிகள் அரை இறுதிக்குத் தகுதி பெறும் வகையில் அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. மாபெரும் இறுதிப் போட்டி அடங்கலாக மொத்தமாக 13 போட்டிகள் நடைபெறவுள்ளன.

இம்முறை போட்டிகளுக்கு ‘தமிழன்’ பத்திரிகையும், தமிழ் எவ்.எம்மும் ஊடக அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்த அளம்பில் இளந்தென்றல் வி.க.

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு, சிலாவத்தை தெற்கு, தியோகுநகர் அலைகள் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டியில் கரிப்பட்டமுறிப்பு உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி, அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழகம் வெற்றிக்கின்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கரிப்பட்ட முறிப்பு உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி 8 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டு களை இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அளம்பில் இளந்தென்றல் அணியினர் 7.1 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டி கிண்ணத்தைத் தமதாக்கிக்கொண்டனர்.




இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்துகொண்டார்.

இறுதியில் விருந்தினர் களது உரைகள் இடம்பெற்ற துடன், இறுதிப் போட்டியில் மோதிய அணிகளுக்கான வெற்றிக்கிண்ணங்களும் பதங்கங்களும் வழங்கப்பட் டிருந்தன.

# மே தின விளையாட்டு விழா – 2025

(எம். நஸார்)

மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம் 14ஆவது வருடமாகவும் நடத்தும் மே தின விளையாட்டு விழா, இந்த வருடமும் மே தினமான வியாழக்கிழமை அன்று காலை 7 மணி முதல் செட்டியார் தெருவில் நடைபெறவுள்ளது.

கொழும்பு வாழ் மலையக இளைஞர்களை ஒன்றிணைக்கும் முகமாக, புதுவருட கலாசார நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளும் விதமாக இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மரதன் ஓட்டப் போட்டி, 100 மீ., 200 மீ. ஓட்டப் போட்டி, அஞ்சல் ஓட்டப் போட்டி, கயிறுழுத்தல், முட்டி உடைத்தல், சங்கீத நாற்காலி, யானைக்கு கண் வைத்தல், சாக்கு ஓட்டப் போட்டி மற்றும் சிறுவர்களுக்கான போட்டிகள் அனைத்தும் இடம்பெறவுள்ளன.

மன்ற உறுப்பினர்கள், நலன்விரும்பிகள், மலையக இளைஞர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## PSL - 2025

**இன்றைய போட்டி**

போட்டி இல. - 19

**லாஹூர் VS இஸ்லாமாபாத்**

லாஹூர் - இரவு 8.30 மணி




# இலங்கைக்குப் பதிலடி கொடுத்த பங்களாதேஷ் இளையோர் அணி

இலங்கை இளையோர் அணிக்கும் பங்களாதேஷ் இளையோர் அணிக்கும் இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் இளையோர் அணி 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலகு வெற்றியீட்டியது.

6 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணி வெற்றியீட்டிய நிலையில் 2ஆவது போட்டி நேற்று முன்தினம் கொழும்பு சி.சி.சி. மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய 19 வயதுக்குட்பட்ட இலங்கை அணி 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் இளையோர் அணி 34.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 215 ஓட்டங்களைப் பெற்று அபார வெற்றியீட்டியது. தற்போது தொடர் 1-1 என சமநிலையடைந்திருக்கும் நிலையில், 3ஆவது போட்டி நாளை வியாழக்கிழமை கொழும்பு கோல்ட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## IPL - 2025

**இன்றைய போட்டி**

போட்டி இல. - 49

**சென்னை VS பஞ்சாப்**

சென்னை - இரவு 7.30 மணி

**முடிவு**

போட்டி இல. - 47

போட்டி இல. - 47
குஜராத் - 209/4 (20)
ராஜஸ்தான் - 212/2 (15.5)
ராஜஸ்தான் 8 விக்கெட்டுகளினால் வெற்றி

தற்போது விற்பனையில்...

மாணவர்களின் கல்வி வழிகாட்டியான

ஜீனியர் தமிழன் | மே மாத சஞ்சிகைகள்

பாடசாலை பாடத்திட்டத்தின்படி, தவணைகளின் அடிப்படையில், தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களால் தொகுக்கப்பட்டு வெளிவருகின்றன.




மேலதிக விபரங்களுக்கு :
011 5 200 900 | 074 1684643 | 0777 983308 | Junior Thamilan

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo −07